
பதிவு எண் 2041

மகாத்மா காந்தி வாழ்க

தனிப்பிரதி விலை { உள நாடு 1 அணா / வெளி நாடு $1\frac{1}{2}$ அணா }




வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1-12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஸ்ரீ புரட்டாசி மீ 9உ (25—9—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 22.

இனம்! இனம்!! இனம்!!!

## பெண்களுக்கு


அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு, ஸ்கப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்றமுள்ளது.

$2\frac{3}{4}$ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
ஸில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ. 4—8—0
$2\frac{3}{4}$ அகலம் $7\frac{1}{2}$ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0
"ஸ்பெஷல்" கேட்லாக் இனம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.

இனம்! இனம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஸ்ரீ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.


மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

13-ம் வருடம் பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

## 'ஆனந்த போதினி'.

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது
20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது
இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனம்.
விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு $3\frac{1}{2}'' \times 2\frac{1}{2}''$ ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

## தீபாவளி! பண்டிகை தீபாவளி!!

### வெள்ளி நகைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு, செயின், அரணுக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையருக்களும் இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகைருக்களும் அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையருக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 கெ. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விலைளை குறைத்து இருக்கிறோம் வேண்டியதற்கு ஆர்டர் எழுதினுல் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனுமாய் அனுப்பப்படும்

விலாசம்,

தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்

தந்தி விலாசம் "சராப்" சேலம்

சுருப் & ஜவுளி வியாபாரம்
குகை, சேலம். (S. India)

## ஞான திருஷ்டி அல்லது திரிகால தீபம்.


இந்நூல் வடமொழியில் முன்னோர்களால் பனை ஓலைச் சுவட்டில் எழுதியிருந்ததை இப்போதுதான் தமிழில் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டது. இப்புத்தகம் ஒன்று உங்களிடம் இருக்குமானுல் யார் எக் கேள்வி கேட்டாலும் எக்ஷிணியைப் போன்ற பதிலும் நீங்கள் நினைக்கும் சகல காரியத்தின் பலாபலன்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் வாழ் நாள் முழுமையும் ஜோசியரைத் தேட அவசியமே இல்லை.

தபாற் செலவுடன் விலை ரூ 1

ஜானகிராம் அன் கம்பேனி, வெங்கட ராமய்யர் வீதி, மதராஸ்.

முன் விலை ரூ 14. இப்பொழுது ரூ 7

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்




மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானுலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனுமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹசியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்,



64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1,

மாணிக்க விலாசம் பிரஸ்.
அருணாசல முதலி வீதி, மதராஸ்.

## மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை.சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

## மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனும்.

## சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சனை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவீ. கேட்லாக் இனும் விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலயம், திருச்சங்கோடு.

## கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

கே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி



## பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கேட்லாக் இனும்

ஸன் கம்பேனி, தஞ்சாவூர்.

## கதரன்பர்களுக்கு வேண்டுகோள்.

வரும் தீபாவளியன்று கதரணிவது கடமையல்லவா, அன்றையதினம் முக்கியமாக கதர் பனியனுவது அணியவேண்டும். நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0
32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர் ஜவுளி தினுசுகளும் கிடைக்கும் விலை விபா ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார்,
திருப்பூர்,
(தென் இந்தியா.

## சுப்பிரமண்யர் கவசசத்து.

சகலகாரியங்களும் அனுகூலம். சகலவசியங்களும் ஏற்படும். விசுவாசம், வியாதியை கொடுக்கும் பயங்கரங்கள் நீங்கும் தரித்திரம் முதலியது அணுகாது.

சத்து 1-க்கு விலை ரூ. 2 தபால் செலவு வேறு

இன்னும் வேறு விஷயங்களுக்கும் எழுதி தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகதி முன் பணம் தாபால் செலவுடன் சேர்த்ன் அனுப்ப வேண்டும்.

வி எஸ் அய்யர், சுப்பிரமண்ய உபாசி
பழனி. Palni P. O. (S. I.)

## சேலம் ஜில்லா கோ-வம்சத்தின் 2-வது மகாநாடு.

1—10—27-உ நஞ்சையிடையாற்றில் நடைபெறும். இம்மகாநாட்டுக்கு ஸ்ரீமான்களான பழைய கோட்டை பட்டக்காரர் ராவ் பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார், காடையூர் பட்டக்காரர் இம்முடிக் குமாரகாங்கேய மன்றாடியார், கோயமுத்தூர் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், சேலம் ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்டு எஸ். பி. ராஜமாணிக்க பண்டாரம், சேலம் ஜீவ காருண்ய சங்க காரியதரிசி வை. நடேச பண்டாரம், தென்நாடு பத்திரிகாசிரியர் பி. முனுசாமி கவுண்டர், ஓலப்பட்டி ஜமீன்தார் கொமா வேலு கவுண்டர் முதலிய கனவான்கள் விசேஷ நன்கொடையளித்ததுடன் மகாநாட்டுக்கும் வருவார்கள் ஆகையால் எல்லா கனவான்களும் ஷெ மகாநாட்டுக்கு அவசியம் விஜயம் செய்ய வேணுமாய்க் கோருகிறோம்.

நஞ்சையிடையாறு 14—9—27 } எம். அழகுசாமிபண்டாரம், காரியதரிசி

# தனவைசியவாலிபர்கட்கு எனது கோரிக்கை.

(கைவல்ய சாமியார் எழுதுவது)

உங்கள் நாடும் சமூகமும் சைவசமயத்தில் பற்றுடையனவென்றும், சைவ சித்தாந்த சமயமுடையனவாயிருந்தும் சுமார்த்த மதப்புரோகிதர்களின் கர்ம வழியே ஏராளமான பொருள் தான தர்மம் செய்கின்றனவென்றும், சைவக்கோவில்களைப் புதிப்பித்தும் புதிதாய்ச் செய்தும் சத்திரம் சாவடி வேத பாடசாலை கல்விச்சாலை முதலியவைகள் செய்து வைத்தும். சிபார்சினாலும் பிரமையினாலும் மோசடியினாலும் வரும் தருமங்களுக்கு உதவி செய்தும், அநேக வி ; வித்வான்களுக்குப் பரிசு அளித்தும் வந்திருக்கின்றன என்பது மட்டும் தெரியும். உங்கள் சமூகம் தயையில்லாப் படிப்பு பக்தி ஒழுக்கம் மூன்றுமில்லாத கோவில் குருக்களுடைய காலின் கீழ் விழுந்து, வஞ்சனை மமதை, பொருள் பறிப்பதில் எப்பொழுதும்ஏமாற்றுங்கபடம், அது தீர்ந்தவுடன் கொடுத்தவனைப் பழித்தலே விவகாரம். இத்தனையுமுடைய புரோகிதர்களின் காலில் தேய்க்கப்பட்டு, குருட்டு நம்பிக்கையின் கொடுமைக்குள் புகுந்து, குருட்டு பிரசாரம் என்ற தளை பூண்டு, புழுதியில் கிடப்பதையும் நீக்கி சகஜ நிராகார நித்ய ஜயா மிருத ரூபமான ஆத்ம ரூபத்தின் தன்மையைத் தெரிய முதல் முதல் சுயமரியாதை வேண்டுமென்னும் தன்மையை உங்கள் குலதெய்வ "குமரன"ருளால் பெற்று அதை உங்கள் ஜன சமூகத்திற்குள் புகுத்தப் புறப்பட்டிருக்கும் உங்கள் ஆசையைக்காண ஆறக்குத்தான் ஆனந்த முண்டாகாது.

பழயதை புதியதாகவும், பலமற்றதைப் பலமுடையதாகவும், அவமானத்தை மாட்சியுடைய வெற்றியாகவும் மாற்ற வேண்டுமானால் அதற்கு மனிதனிடத்தில் மறைந்திருக்கும்தேவசக்திதான் வந்து தீரவேண்டு மென்பதையும் ஒத்துக்கொள்ளவேண்டும். அந்த தேவ சக்தியானது உங்கள் நாட்டிலே இந்த அற்ப ஆசார அனுஷ்டானங்கள் நடக்கும் இந்தக்காலத்தில் பிறக்க வில்லை. முணுமுணுக்கும் மந்திரங்களிலும் மூர்த்தி உபாசனையிலும் பிறக்க வில்லை, குருவின் பிரயோஜனமற்ற ஆடம்பரமும் புரோகித புரட்டும் அதனால் செழிப்படைந்த கபடமும் தலை எடுத்திருக்கும் இந்த நாட்களில் அது பிறக்க வில்லை. வீர ஆண்மையின் உதய காலத்தில் தனதாத்மாவிலும் ஜகத்தைப்பிரகாசப்படுத்திய பரமாத்மாவிடத்திலும் நம்பிக்கை கொண்டிருந்த உங்கள் முன்னோர் அடிமை புகாத காலத்தில் பிறந்தது. பிரயோஜனமற்ற சாஸ்திர குப்பை கூளங்களை எல்லாம் கூட்டித் துடைத்து, சமயப் போரால் பாழாகும் பணத்தை பலனுக்கு உபயோகிக்க வேண்டுமென்னும் உங்களுக்குத் தோன்றின பயிற்சி சுயமரியாதையோடிருந்த உங்கள் முன்னோர்களிடமிருந்து கிடைத்தது. அப்பயிற்சி எப்படிப்பட்டது? மெய்யான செல்வமும் வலிமையும் வேண்டினால், நோக்கத்தைத் தன்னுள்ளே செலுத்த வேண்டுமென்று கற்பித்த பயிற்சி. ஆபத்து வரும்போது புலனிழந்து போகாமல் காக்கும் பயிற்சி, மானத்தைவிட மரணத்தை இகழ வேண்டுமென்ற பயிற்சியுடன் வாழும் மனிதருக்கு நாம் எண்ணற்ற கடமைகள் செலுத்தவேண்டுமென்ற பயிற்சி, இப்பயிற்சி உங்களுக்குப் பூர்வ வாசனையாயிருந்தாலும் சமூகத்தின் உயிருக்கு நல்வழி காட்டும் சக்தியாகிய தியாகமும் அனுதாபமும் கூட்டுத் தொழிலுக்கு இடமாகிய தர்ம சிந்தையையும் நீங்கள் ஆபரணங்களாக அணியவேண்டும். உங்களைப் பார்த்து சிலர் "இது சரித்திரத்திலே ஒரு விநோதம். காலதேவதையின் குழந்தை விளையாட்டு. மழை காலத்தி லுண்டாகும் குமிழியைப் போலேகோளத்திலும் வர்ணத்திலும் குறைவில்லை. ஆனால் உள்ளே ஓட்டை, சத்தில்லாதது" என்று பயப்படுகிறவர்களுமுண்டு. ஆனால் நீங்கள் அநேக நாள் அடிமைப் பட்டுக்கிடைத்த அதிர்ச்சியே அன்றி நீங்கள் எதிர்பாராதசக்திப்பிரசாரம் சில நாள் விந்தையன்று. காலத்தில் அதிர்ச்சையாக விளைந்த விளைவன்று. ஆழ்ந்த இருளினின்றும் வீசுண்டு மறுக்ஷணம் சூனியக் கடலில் மோதப்படும் பொய்ப்பொருளன்று, என்று நீரூபணம் செய்து விடுவீர்களென்றும் அநேகர் நினைக்கிறார்கள். பல தலைமுறையாக உங்கள் முன்னோர்களும் நாடும்,பிரயோஜனமற்றதும் உபயோகமற்றதும் பிறர் லாபத்தால் உங்களுக்கு விதிக்கப்பட்டதுமான கர்மங்களை கடவுள் வழி பாடு மோட்சம் புண்ணியமென்று நம்பி நடந்தும் எண்ணியும் தொழில் செய்தும் இன்புற்றும் தொழுதும் வந்திருக்கிறீர்கள். இதை எல்லாம்பழங்கதைபோலே களைந்தெறிதல் ஒரு நாளில் இயலாது. இந்த வழக்க நம்பிக்கை உங்கள் ரத்தத்தில் கலந்திருக்கிறது. உங்கள் எலும்பிற்குள் ஊனுக்குள் தசைக்குள் மூளைக்குள் கலந்திருக்கிறது. நீங்கள் கைவைப்பதிலெல்லாம் அது தொழில் செய்யவரும். உங்களுக்குத் தெரியாமலே வரும். உங்கள் இச்சையை மீறிடம் வரும். தெய்வ விரோதமான இந்தக் குருட்டுக் கொள்கையைத் தைரியத்துடன் எதிர்த்துநிற்போரைப் பலர் பகைக்கவும் கூடும். பிறர் சிந்தையும் மற்றவர் தாட்சண்ய நகைப்பையும் கருதாமல் தோல்விக் கஞ்சாமல் ஆண்மை காட்டும் ஆண் இளைஞர்கள் தான் தாங்கள் கண்ட அறிவின்வாழ்விற்கு தாங்கள் கண்ட உண்மை வழியைஇக்கால நிலமையில் செலுத்தி பார்க்கும் போது அதிலிருந்து புது சிருஷ்டிதோன்றும். அந்தச் சிருஷ்டி வெறும் அபிநயமன்று. அதை அவர்கள் தனதாத்மாவென்று கொண்டு உலக க்ஷேமத்திற்கும் அதனையே தனது காணிக்கையாக இறுமாப்புடன் செலுத்தும் பாக்கியத்தைப் பெறுவார்கள், செத்ததை அடைக்கலம் புகுதல் சாதலேயாம். உயிரில் என்ன அபாயம் நேரிடினும் அஞ்சாது மேற்கொள்ளுவதே உயிர்த்தல் என்னும் பாட்டத்தை எல்லாருக்கும் கற்பிப்பீர்கள். உங்கள் உயிரின் வளர்ச்சியான சுயமரியாதையையும் உண்மையையும் அழகையும் மேலாக வெண்ணிக் கேவலம் காரிய லாபத்தையும் வலிமையையும் தாழ்வாக நினைத்து இங்ஙனம் நீங்கள் நடத்தப்பார்க்கும் காரியங்களைத் தமிழ் நாடு ஆவலோடு எதிர்பாக்கிறது:

இன்னும் ஒரு விஷயம் நீங்கள் கவனிக்கவேண்டியிருக்கிறது. சமஸ்கிரத பாஷையை அவசியம் படித்தே தீரவேண்டும். இப்பொழுதிருந்தே ஆரம்பித்தீர்களானால் இனியும பத்து வருடத்தில் நீங்கள் இப்பொழுது கொண்டிருக்கும் எண்ணத்திற்கு இரும்புத் தூண் போன்ற வித்வான்கள் உற்பத்தியாகி விடுவார்கள். உங்கள் செலவில் சம்ஸ்கிரதம் படித்து உங்களையே விலக்கி உங்களையே கீழாக்கி உங்கள் பொருளை அபகரிக்கவஞ்சனையால் இழிந்த தந்திரத்தைச் சாஸ்திரமென்று சொல்லும் பாப்பான் படிப்பையும் தெரிந்துகொண்டு ரிஷிகள் சொன்ன உண்மைகளையும் பல பாப்பான் எழுதின புரட்டு சாஸ்திரங்களும்விலக்கும்இந்துமதமென்னும்ஆபாசங்களெல்லாம் ஒழிய யுக்திவாதம் பிரத்தியக்ஷத்திலிருந்தாலும் சாஸ்திர நிச்சயமும் தெரிந்தால் விசேடமே. "பஞ்சாட்சரத்தையோ, நமசிவாயத்தையோ, சரவணபவத்தையோ சிதம்பரமென்னும் ரகசியத்தையோ எல்லாஞ்சேர்த்த ஓங்காரத்தையோ இடைவிடாமல் ஜபிப்பதனாலும் அதின் பொருளைத்தியானிப்பதனாலும் சகலமும் அடைய முடியும் ஈஸ்வர நாமங்களை யுச்சரிப்பதனாலுண்டாகும் சக்தியினால் பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டு விடுகின்றன ஈஸ்வர சித்தத்தினிடத்திலே தன்னைத்தானே சமர்ப்பித்துக் கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் அடைகிறான்." என்ற சாஸ்திரங்களினுடையவும் மகாத்மாக்களுடையவும் இவ்வார்த்தைகள் உண்மை என்றே வைத்துக்கொள்ளலாம். ஆனால் நம்மில் ஆயிரக்கணக்கானவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் முன் சொன்ன மந்திரங்களான ஓங்காரத்தைத் தியானித்துக்கொண்டும், ஈஸ்வர நாமத்தினிடத்திலுள்ள பக்தினாலேயே மெய்மறந்து "உனதுஇஷ்டப்படியே நடக்கும், நான் உன்னிடத்தில் பரிபூரணமாக சரணாகதியடைந்து விட்டேன்" என்று கூச்சலிட்டு ஆடிப்பாடி ஆசாரமே உருவாய் இருந்தும் ஒன்றையும் அடையாமலிருப்பதை நாம் பார்க்க வில்லையா? ஏன்? மூட வழக்கங்கள் எல்லாவற்றையும் ஆதரித்து அவற்றைச் சாஸ்திரீயமான நியாயங்களென்றும், கடவுள் கைங்கிரியமென்றும் தப்பான மார்க்கத்தில் நடந்து உண்மையான தர்மத்தை விட்டுவிட்டமையாலேயாம். சாமர்த்தியம் வாய்ந்த மனிதர்கள் தாங்கள் இஷ்டப்படுகிற வழியெல்லாம் ஜன சமூகத்தை சலிப்பித்துக்கொண்டு வருகிறார்கள். மற்றவர்கள் அவர்களைப் பின்தொடர வேண்டித்தானிருக்கிறது. அந்த மனிதர்கள் மதப்பற்றும் மதஅதிகாரமும் காரியலாபமும் உடையகுருக்கள் புரோகிதர்கள் ஆசாரிகள். நாம் அவர்கள் ஆக்ஞையிடுவதைச் செய்கிறோம். அதில் ஒன்றிரண்டு நல்ல உபதேசங்கள் உண்டாயிருந்தால்ஆராய்ச்சி செய்ய அதிலும் அதிகாரமுங்கிடையாது. சமய வொழுக்கமென்பது உள்ளன்புடன் எம்பெருமானது திருவடிகளிலே செய்யப்படும் நிர்மலமான பக்தியே யன்றி வெறும் வெளிச்சடங்குகளல்ல. ஒருவன் மனமொழி மெய்களில் பரிசுத்தனாயிருந்தாலன்றி அவன் கோயிலுக்குள் வந்து சிவனைத் தரிசித்தலாற் பயனில்லை. மனத்திலும் மெய்யிலும் பரிசுத்தமாய் பிரார்த்திப்பவர்களுக்குச் சிவபெருமான் பிரசன்னமாகிறார் என்பதுதான் மதத்தின் முடிவாகவிருக்கிறது. குருக்கள் கட்டுப்பாடுவேறு மதம் வேறு என்பது உங்களுக்குத் தெரியும், இதற்காகவே புண்ணியமும் அதற்காகவே தர்மமும் செய்யப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தர்மமானது கர்மத்தின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்காகவே எல்லாவித இந்து சாஸ்திரங்களும் "கர்மத்தைச் செய், கர்மத்தைச் செய்" என்று சொல்லுகிறது. கர்மம் என்பது என்னவென்பதுதான் சரியாக அர்த்தம் செய்யப்பட்டு சரியாக ஜன சமூகம் தெரிந்து கொள்ளவில்லை. தெரிந்து கொள்ளப் பாப்பான் விடுவதுமில்லை. தெரிந்து கொள்ளவேண்டுமென்கிற ஆசையும் வரவில்லை. நன்னிலைமைக்கு வரமுடியாதபடி சன்மார்க்கங்களையெல்லாம் இழந்திருக்கிறவர்கட்கு நன்மை செய்ய முயல்பவர்களாகிய உங்கள் பேரில் பாய்வதற்குத் தயாராயிருக்கிற உயர்ந்த கூட்டத்திற்குள் உயிரையும் நீங்கள் செலுத்த வேண்டும். இந்த வேலையும் ரகசியமும் தெரியாதவர்கள் பாப்பானையேன் குற்றம் சொல்லுகிறீர்கள் என்று கேட்கவும் செய்வார்கள். குழந்தை கெர்ப்பத்திலுண்டாவதற்கும் உண்டாகிப்பிறக்கும் வரைக்கும் பிறந்து கண்ணைத்திறத்தல் தூங்குதல் உண்ணல், குடித்தல் பள்ளிக்கு வைத்து கலியாணம் பண்ணி பாடை ஏற்றுகிற வரையிலும் கர்மந்தான். புரோகிதக் கொள்ளைதான். அப்பொழுதுதான் கடவுள் கிருபையும் அதிர்ஷ்டமும் உண்டாகுமாம். இந்தக் கர்மங்களெல்லாம் பிராமணனுக்கே தானம் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறது. செய்தும் வருகிறோம். அந்த பிராமணன் யார்? எந்தப் பிராமணனுக்குத்தானம் கொடுக்கசொல்லப்பட்டிருக்கிறது? தானப்பாத்திரம் யார்? கீழ் விழுதலினின்று தப்பிக்

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# காந்தியடிகளின் உபதேசம்

## தமிழர்கள் கற்கவேண்டியது திருக்குறளா? பகவத் கீதையா? தமிழ் மொழியா? வட மொழியா?

---

சிதம்பரனுர் எழுதுகிருர்.

திருவல்லிக்கேணி இந்து ஹைஸ்கூலில் மகாத்மா காந்தியடிகள் செய்த பிரசங்கத்தை நாமும் கூர்ந்து கவனித்தோம் அதைப்பற்றியும் மகாத்மாவின் தமிழ்நாட்டு விஜயத்தால் உண்டாகும் மூடநம்பிக்கைகளைப் பற்றியும், நமது சுயமரியாதை வீரனை "குடி அரசு" தலையங்கமும் எழுதிவிட்டது. திருநாயக்கரவர்கள் மீண்டும் தமிழ் நாட்டிற் சுற்றுப்பிரயாணம் செய்து சுயமரியாதை இயக்கத்தை வளர்க்க முடிவுசெய்திருக்கும் செய்தியையும் அறிந்தோம். அதுபற்றி சுற்றுப்பிரயாண மூலமாகவும், கட்டுரைகளின் வாயிலாகவும், பிரசாரம் செய்பவேண்டியதவசியமே. நண்பர்களை ஒன்று வேண்டிக்கொண்டுஇதை எழுதுகின்றேன். இதை எழுதுவதால் நான் மகாத்மாவினிடம் வெறுப்புள்ளவனென்றே அன்பில்லாதவனென்றே எண்ணி விடுதல் கூடாது. எனது கொள்கையை உடையவர்களெல்லாம் மகாத்மாவைத் தூற்றிவந்த காலங்களிலும் அவரை நான் போற்றிவந்தவனென்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதங்களும், ஒழுக்கங்களும், மொழிகளும், ஒவ்வொரு நாட்டின் சீதோஷ்ண நிலைமைக்கேற்ப அமைந்துள்ள தென்பது ஆராய்ச்சியறிஞர் கூறும் உண்மைச்செய்தி. தமிழர்களின் ஒழுக்கமும், மொழியும், மதமும், தமிழ் நாட்டின் நிலவமைப்பிற்கு ஏற்றவாறமைந்துள்ளன. அது போல வடநாட்டின் தட்பவெப்ப நிலைக்கேற்ற முறையில், அந்நாட்டு மொழிகளும், மதங்களும், ஒழுக்கங்களும் அமைந்துள்ளன. அவ்வாறே மேல் நாட்டு மொழிகளும், பழக்க வழக்கங்களும், மதக்கொள்கைகளும், அமைந்துள்ளன. மற்றைய நாடுகள் எப்படியிருப்பினும் அதுபற்றிய கவலை நமக்கு அதிகமில்லை. கவலையெல்லாம், தமிழ் நாட்டைப்பற்றியதே. ஏனெனில் உலகில் புராதனமான, உயரிய நாகரிகத்தைக்கொண்டிருந்த நாடுகளில் தலைசிறந்தது நமது தமிழ் நாடென்பதைத் தெளிந்திய சரிதங்களை ஆராய்ந்த அறிஞர்கள் ஒப்புக்கொள்ளுவார்களென்பது திண்ணம். ஆகவே தமிழ் நாட்டிற் செய்யவேண்டிய வேலை, தமிழர் மதத்தைப்பரவவைப்பதும், தமிழ் நூல்களின் பெருமையையுணர்த்துவதுமே யாகும். அவ்வேலை நமது சுயமரியாதை யியக்கத்தின் மூலம் நடைபெறுவதுகண்டும் மகிழ்ந்திருந்தோம். இச்சமயத்திற் "பூசை பண்ணும் வேளையிற் காடியை எட்டு ஒட்டுவது போல" பார்ப்பனர்கள் ஒன்று கூடி உண்மையாகவே உலக குரு என்று சொல்லத்தகுந்த, மகாத்மாவாகிய பரமாத்மாவைக் கூட்டிக்கொண்டு வந்து தமிழர்களை ஏமாற்றப்பெரிதும் முயல்கின்றனர். மகாத்மாவும்,பார்ப்பனர்களின் வலையில்சிக்கிக்கொண்டு, தீண்டாமை ஒழிய வேண்டுமென்று கூறுவதும் அதே சமயத்தில் வருணாசிரமம் இருக்கவேண்டுமென்றும் கதருக்கென்றும் பணம் திரட்டிப் பார்ப்பனர்கள் கையில் ஒப்படைப்பதும், எல்லோரையும் சமஸ்கிருதம் படியுங்கள் என்று கூறுவதும், பகவத்கீதைதான் இந்து மதத்திற்குரியதென்று பார்ப்பனர் மகிழப்பேசுவதுமாக இருப்பதைக் கண்டு என் போன்றோர் பெரிதும் வருந்தாமலிருக்க முடியாது.

நமது தமிழ் நாட்டு மக்களைக்கெடுத்ததும்,பார்ப்பனீயத்தில் அமிழ்த்தியதும்,சமஸ்கிருத மொழிகளும் சம்ஸ்கிருத நூல்களுமென்பதே நமது உண்மையான அபிப்பிராயம். ஏனெனில், சமஸ்கிருத நூல்கள் பெரும்பாலும் பார்ப்பனர்களாலும், அவர் மதத்தில் ஈடுபட்ட கோடறிக் காம்புகளாலும் எழுதப்பட்டிருக்கின்றமையால், பார்ப்பனர்களை உயர்தப்படிருக்கிறமையால், பார்ப்பனர்களை உயர்த்தியும், பார்ப்பனரல்லாதாரை அடிமைகளென்றும், சூத்திரர்களென்றும் பஞ்சமர் என்றும் சண்டாளர்கள் என்றும் அசுரர்கள் என்றும் ராக்ஷதர்கள் என்றும் நாய்க்கள் என்றும் எழுதி வைத்திருக்கின்றார்கள். ஆகையால் அம்மொழி நூல்களைப் பகுத்தறிவின்றி மூடநம்பிக்கையுடன் படிப்பவர்களனைவரும் பார்ப்பனபக்தர்களாகவும் குருட்டு நம்பிக்கையுடையவர்களாகவுமேயிருப்பார்களென்பதும் தங்களைத் தாங்களே இழிவாக நினைத்துக் கொள்வார்களென்பதும் திண்ணம். நமது தமிழ் சகோதரர்களில் பெரும்பாலர் இன்னும் தாய் மொழிப் பயிற்சியிற்கூடக் கவனம் செலுத்தாமலிருக்கும்போது, சமஸ்கிருதம் படிக்கவேண்டுமென்று கூறுவது எவ்வளவு பொருந்தமானது? நமது நாட்டு மக்களின் நிலையை இன்னும் காந்தியடிகள் உணர்ந்து கொள்ளவில்லை போலும். அவரென்ன செய்வார்!பக்கத்திலிருப்போர் கூறியதைத் தானே நம்பியிருப்பார்! இந்து மதம், இந்து மதம் என்று கூறிக்கொண்டு மக்களை மூடவழக்கங்களாற் கட்டுப்படுத்துகின்ற கண்மூடிக் கொள்கையை ஒழிக்க வேண்டுமென்று தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் வேலை செய்து வருகின்ற காலத்தில் மகாத்மாவைப் பார்ப்பனர்கள் கூட்டிக்கொண்டு வந்து இந்து மதப்பிரசாரம் செய்கின்றனர். மகாத்மா கூறுகின்றார் என்தபாக நாம் நமது அறிவைச் சொந்தமாக வைத்துக் கொள்ளாமல் விட்டுவிடத் துணிவது முறைமையாகுமா?

இனி பகவத்கீதையைப்பற்றி அவர்கள் கூறுவன வற்றைப்பற்றிச் சிறிது எழுத விரும்புகின்றோம். நான் பகவத்கீதையை மிகவும் அன்புடனும் பக்தியுடனும் படிப்பவர்களில் ஒருவன். அதில் அநேக உண்மைப் பொருள்களும், மனிதன் அறிந்து கொள்ள வேண்டியன சிலவும் அடங்கியுள்ளனவென்பதை ஒப்புக்கொள்ளுவதானாலும் வடநாட்டாருக்கும் வடமொழிக்காரர்களுக்கும் அந்நூல் மிகவும் பெருமையுடையதாகக் காணப்படுவது இயற்கையே. ஆனால் தமிழர்கள் அதை அவ்வளவு தூரம் ஏற்ற முன்படமாட்டார்கள். ஏனெனில் அது வருணாசிரமத்திற்கும் ஆரிய மதத்திற்கும ஆதாரமாயிருப்பதுடன் தமிழர்களிடம் பகவத்கீதையினும் பன்மடங்கு சிறந்த நூல்களிருக்கின்றன. அவற்றுள் தலைசிறந்தது திருக்குறளாகும்.

மனித வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தும் அதில் நிறைந்திருப்பதை அறியலாம். அன்றியும் எம்மதஸ்தரும் எந்நாட்டாரும் ஆக்ஷேபிப்பதற்கில்லாமல் இருப்பதோடு தமிழர்கள் எளிதிற் பயிலவும் கூடும். அதைப்பயின்றோர்களாயின், அறிவு வளர்ச்சியும், சுயமரியாதை உணர்ச்சியும் பெறுவார்கள். ஆகவே தமிழர்கள் படிக்கவேண்டிய நூல் திருக்குறளே. அந்நிய மொழி நூலாகிய பகவத்கீதையன்று. ஏனெனில் அது வடமொழியில் உள்ளது.நாட்டிற்கும், மக்களுக்கும் எள்ளளவும் பயன்படாத மொழியிற் செய்யப்பட்ட ஒரு நூலைத்தமிழர்கள் பயில்வதைவிட, தங்கள் தாய் மொழியில் ஆக்கப்பட்டிருக்கும் உலகிற்கே சிறந்ததாகிய திருக்குறளை பயில வேண்டுவது அவசியமன்றோ?

மகாத்மா அவர்களுக்குத திருக்குறள் ஒன்று இருக்கின்றதென்றே, அதில் உள்ள பொருள்களோ சிறிதும் தெரியாதென்றெண்ணுகின்றேன். ஏதோ நமது தமிழ்நாடு செய்த தவக்குறைதான் அவர் தமிழ் மொழியின் பெருமையையும் தமிழர் மதத்தையும் அறியாதிருப்பது. தமிழர்களின் பண்டைய பழக்க வழக்கங்களையும், பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை யென்பதையும், தமிழ் நாட்டில் வருணாசிரம தருமம் இல்லை யென்பதையும், வருணாச்சிரம தருமம் ஆரியர்களால் தான் தமிழ் நாட்டில் பரவச்செய்யப்பட்டதென்பதையும் மகாத்மா அவர்கள் அறிந்திருக்க மாட்டார்களென்றே நம்புகின்றோம். அறிந்திருப்பாராயின் எல்லோரையும் பகவத்கீதை படிக்கவேண்டுமென்றும், சமஸ்கிருதம் கற்கவேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கமாட்டார். ஒரு சமயம் வேறு பாஷை கற்பதும் நல்லதென்று நினைப்பாராயின் வேறு யாரையாவது தமிழ் படிக்கும்படியாவது தமிழ் நூல்களைப் படிக்கும்படியாவது எங்கேயாவது சொல்லியிருக்கிறாரா? ஆகவே இவையெல்லாம் பார்ப்பனர்களின் படுமோசமாகும். அவரைச் சுற்றிக்கொண்டிருக்கும் பரிவார தேவதைகளாகிய பார்ப்பனர்கள் தமிழ் நாட்டின் பண்டைய நிலையைக் கூறுவது கிடையாது. அதனாலேயே அவருக்கும் கெட்ட பெயரைச் சம்பாதித்து வைக்கின்றார்கள்.

தமிழருக்கு வேண்டியது திருக்குறளா? அல்லது பகவத்கீதையா? தமிழர் கற்கவேண்டுவது தமிழ்மொழியா? சமஸ்கிருதமா? என்று தான் கேட்கின்றோம். யாவரும், அதாவது தமிழ்மக்கள் அனைவரும் தமிழ்ப் பயிற்சியையும், திருக்குறட் பயிற்சியையுமே வேண்டுவார்கள். அங்ஙனமாக அவர்களை இறந்துபட்ட மொழிகளைப் பயிலுமாறு கூறுவதும் அன்னிய மதத்தைக் கொண்டுவந்து புகுத்துவதும் அழகல்லவென்பதைப்பெரியாராகிய மகாத்மாவாவிற்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். காந்தியடிகள் நீடூழி வாழ்க. அவருக்கு உண்மை விஷயம் புலப்படுக.

---

# குருக்களின் புரட்டு.

குற்றாலத்தில் திரு நாயக்கர் செய்த பிரசங்கத்தின் சாரம். முற்பாகங்கள் இரண்டு பிரிவாய் அதாவது "அரசியல் புரட்டு" 'மதப்புரட்டு' என்பதாக இரண்டு வியாசமாய் இதற்கு முன் "குடி அரசு" மலர்களில் பிரசுரமாயிருக்கிறது. அதன் தொடர்ச்சியாகிய ஆச்சாரியார்கள் என்னும் குரு தன்மையின் புரட்டைப் பற்றிய விஷயத்தையும் எழுதுகிறோம்.

சகோதரர்களே!

இதுவரை அரசியல் புரட்டையும், மதப் புரட்டையும் பற்றிச் சொல்லி வந்தேன், இனி ஆச்சாரியார், குரு, மகந்து, சங்கராசாரிகள், மடாதிபதிகள் என்பவர்களின் பேரால் நடக்கும் புரட்டுகளையும் சற்று கவனித்துப் பாருங்கள். எந்த தனிப்பட்ட நபர்மீதிலும் எனக்கு எவ்விதமான மன வருத்தமும், துவேஷமும் இல்லை. இவர்களுக்கு கொடுக்கும் பணம் நின்று விட்டால் எனக்கு ஒன்றும் லாபம் கிடையாது. நான் சொல்லுவதெல்லாம் நம்முடைய பணம் எவ்வளவு அக்கிரம வழியிலும், அவிவேக வழியிலும் செலவாகிறது என்பதையும் இதன் மூலம் நமது சுயமரியாதைகள் எவ்வளவு தூரம் பாதிக்கப் படுவதோடு நாம் எந்தெந்த வழிகளில் ஏமாற்றப்படுகிறோம் என்பதையும் உங்கள் அறிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்கிற எண்ணமே அல்லாமல் வேறல்ல.

ஆசாரியர், மகந்து, மடாதிபதி, சிஷ்யன், குரு என்று சொல்லும் வார்த்தைகள் தமிழ் வார்த்தைகள் அல்ல அவை ஆரியர்கள் நாட்டு வார்த்தைகள். அவர்கள் இங்கு வந்த பிறகு அவ்வார்த்தைகளை நம் முள் புகுத்தி அவர்களே அவர்களை அவ்வார்த்தைக்கு அருகர்களாக்கிக்கொண்டு, நம்மை அவர்களது சிஷ்யர்களாக்கிக்கொண்டு, நம்மை அவர்களது சிஷ்யர்கள் என்பதாகச் சொல்லி; அந்த மாதிரியான குரு சிஷ்ய பாவத்திற்கு என்னென்னமோ நிபந்தனைகள் ஏற்படுத்தி, அவைகளுக்கு நம்மை கட்டுப் படுத்தி, அவர்களை நாம் கடவுளைவிட சிறந்தவர்களாக மதிக்கும்படியாகச் செய்து ஏமாற்றியிருக்கிறார்கள்.

முக்கியமான கோயிலாகிய திருப்பதியில் மகந்து என்பதாக ஒருவர் எதற்காக இருக்கிறார்? அவருக்கு ஏற்பட்ட வேலை என்ன? அவரால் அக்கோயிலுக்கோ அங்கு செல்பவருக்கோ உண்டாகும் லாபம் என்ன? அவர் கோயிலுக்கு தர்மகர்த்தாவென்று சொல்லுவதானால் மற்ற தர்மகர்த்தாக்களுக்கு இல்லாத தனி மரியாதை அவருக்கு ஏன செய்யவேண்டும்? அவர் ஒரு அரசனின் போகபோக்கியம் அனுபவிக்க எந்த விதத்தில் உரிமை உள்ளவர்? மற்ற பெரும்பான்மையான கோவில்களுக்கில்லாத முறை திருப்பதி கோயிலுக்கு மாத்திரம் ஏன் ஏற்படவேண்டும்? அல்லாமலும், அவர் எந்த பரம்பரையில் வந்தவர்? அவர் ஜாதி, குலம், தாய், தகப்பன் முதலியவர்களின் தொழில், யோக்கியதை முதலியவைகள் என்ன? இந்த மகந்து வேலையில் இதுவரை இருந்து வந்தவர்களின் யோக்கியதை என்ன? எத்தனை மகந்துகள் கிரிமினல் குற்றத்திற்கு தண்டனை அடைந்தவர்கள்? எத்தனை மகந்துகள் லட்சக்கணக்காக சுவாமியின் சொத்தை குடி இழிவான காரியம் மதுபானம் மாம்சம் உண்ணல், விபசாரம் முதலியவைகளில் செலவு செய்து குற்றங்கள் சாட்டப்பட்டனர். என்பவைகளை யோசித்துப் பார்த்தால் இவர்களது வழக்கமான யோக்கியதை இன்னதென்பதும், எந்த விதத்தில் இவர்கள் மதிக்கத் தகுந்தவர்கள் என்பதும், விளங்காமல் போகாது. மற்றும் இம்மகந்துகள் என்போர் சுவாமிக்கு வேண்டுதலை என்பதாக மக்கள் கொண்டுவரும் பொருள்களில் எவ்வளவு பாகம் கணக்குக்கு போகவிடாமல் திருடிக்கொள்ளுகிறார்கள் என்பதும் போய் வந்தவர்களை விசாரித்தால் யாவருக்கும் சுலபமாய் விளங்கும். ஒவ்வொரு யாத்திரைக்காரனிடமிருந்தும் வழிப்பறிக் கொள்ளை போல் வழிமறித்து பிடுங்கிக் கொள்ளப்படுகிறது எவ்வளவு.

அடுத்தப்படியாக லோககுரு என்னும் சங்கராசாரியார் என்பவர்களின் புரட்டு எவ்வளவு என்று யோசியுங்கள். லோக குரு என்று அவருக்கு எப்படி பெயர் தகும்? அவர் யார்? யாருக்கு குரு? என்று பார்ப்போமானால் அவர் இந்தியாவுக்கு குரு அல்ல. இந்தியாவில் உள்ள இந்துக்கள் என்பவர்களில் பார்ப்பனர்கள் எல்லோருக்குங்கூட குரு அல்ல. பார்ப்பனர்களில் உள்ள பல பிரிவுகளில் ஸ்மார்த்தர்கள் என்கிற ஒரு சிறு கூட்டத்தாருக்கு இவர் குரு என்ற பாத்தியமுடையவர். அச்சிறு கூட்டத்தாருக்கும் இவரைப்போல் இன்னமும் நான்கு ஐந்து சங்கராச்சாரியார்கள் என்போர்கள் உண்டு. ஆகவே ஒரு சிறு கூட்டத்தின்——அதாவது நமது நாட்டிலுள்ள சில ஆயிரங்கணக்கான மக்களில் ஐந்து அல்லது ஆறில் ஒரு பாகத்தாருக்கு—குரு என்று ஏற்பட்ட ஒருவர் அக்கூட்டத்தினரின் செல்வாக்காலும், தந்திரத்தினாலும், ஏமாற்றுதலாலும் நம்மவர்களின் அறிவீனத்தினாலும், ஏமாந்த தனத்தினாலும் லோக குரு என்பதாக அழைக்கப்பட்டு இந்துக்கள் என்கிற எல்லா மக்களுக்கும் குருவாகி கோடிக்கணக்கான ரூபாய்களை கொள்ளையடித்து வெறும் பார்ப்பனர்களுக்கே பொங்கிப் போட்டு பார்ப்பனப் பிரசாரம் செய்து வருகிறார்.

ஒரு சங்கராச்சாரி என்பவர் ஒரு ஊருக்கு வருவாரானால் அந்த ஊரிலுள்ள பார்ப்பன உத்தியோகஸ்தர், பார்ப்பன மிராசுதார், பார்ப்பன வக்கீல் முதலிய செல்வாக்குள்ள ஆசாமிகளின் மூலம் அந்நாட்டிலுள்ள செல்வவந்தர்களையெல்லாம் ஏமாற்றி 100, 200, 1000, 2000, 5000, 10000 என்பதாக வசூலிப்பதும் தீர்த்தபதி, க்ஷேத்திரபதி, தர்மபூஷணம் முதலிய பட்டங்கள் கொடுப்பதாகச் சொல்லி அறிவில்லாத செல்வந்தர்களை ஏமாற்றி 1000, 2000 வாங்குவதும், பாதபூஜைக்கு இத்தனை ரூபாய் என்றும், பாத தீர்த்தத்திற்கு இத்தனை ரூபாய் என்றும், தங்கப்பல்லக்கில் ஊர்கோலம் செய்ய இத்தனை ரூபாய் என்றும், வீட்டிற்கு வர இத்தனை ரூபாய் என்றும், வீட்டில் பூஜை செய்ய இத்தனை ரூபாய் என்றும், தமக்கு சொந்தமான குளத்தில் குளிக்க இத்தனை ரூபாய் என்றும், பிருதாகளுடன் வர இத்தனை ரூபாய் என்றும், வெறும தீர்த்தத்திற்கு இத்தனை என்றும், பாததீர்த்தத்திற்கு இத்தனை ரூபாய் என்றும் வியாபார முறையில் பேசி கொள்ளையடிக்கிறார்கள். எந்த ஊருக்கு வந்தாலும் அந்த ஊர்களில் பிரபல்யமாயுள்ள கோயில்களிலேயே வந்து தங்குவதும் அக்கோயிலுக்குள்ளாகவே சங்கராச்சாரிக்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் அதாவது கக்கூசு, ஸ்நானம், சமையல் முதலியவைகள் வைத்துக்கொள்வதோடு சாவில் உள்ள மிதிபடியுடனேயே சுவாமியின் மூலஸ்தானம் வரையில் போய் சாமி கும்பிடுவதுமான காரியங்களையும் செய்கிறார்கள். இம்மாதிரி உலகத்திற்கே குரு என்று சொல்லிக்கொண்டும், பாடல் பெற்ற கோயில்களில் கக்கூசு கட்டிக்கொண்டும், மிதியடியுடன் சாமி கும்பிடவும் உரிமையுள்ளவரான இந்த சங்கராசாரியர்களின் கொள்கை என்ன என்று பார்ப்பீர்களானால், அவர்கள் ஒரு விதத்தில் கடவுள் இல்லை என்று சொல்லுகிற நாஸ்திக மதத்தைச் சேர்ந்தவர்கள் அதாவது தன்னைத்தவிர கடவுள் என்கிற வேறொரு பொருளோ தன்மையோ கிடையாது. தங்களே தான் கடவுள் என்கிற கொள்கையையுடையவர்கள். அதனால் தான் கோயிலில் கக்கூசு கட்டிக்கொள்வதிலும் மிதியடியுடன் மூலஸ்தானத்திற்கு போவதிலும் ஆட்சேபணையில்லாதவர்களாயிருக்கிறார்கள். இந்த கொள்கை உடையதற்கு ஸ்மார்த்தம் என்று பெயர். இது சைவ மதத்திற்காவது வைணவமதத்திற்காவது கொஞ்சமும் சம்பந்தமில்லாதது. கிறிஸ்தவ மதத்திற்கும் மகமதிய மதத்திற்கும் ஒன்றுக்கொன்று எவ்வளவு வித்தியாசம உண்டோ அதைவிட அதிகமாக சைவமதத்திற்கும் வித்தியாசம் உண்டு. ஸ்மார்த்தாளுக்கும் சைவ கோயில்கள் கிடையாது. தன்னையே கடவுள் என்று சொல்லிக் கொள்ளும் இவர் வேறு கோயில்களை கும்பிடுவது ஏமாற்றுவதற்கேயல்லாமல், வேறல்ல.

இன்னும் இவர் சந்நியாசி வேஷம் போட்டுக்கொண்டு தன்னை சந்நியாசி என்று சொல்லிக்கொண்டும் அரசபோகம் அநுபவிப்பார் தனக்கெனவே யானை, குதிரை, ஒட்டகம் சிப்பாய் முதலிய படைகளும் போகிற இடங்களுக்கெல்லாம் கொண்டுபோகிறார்கள். தன்னுடைய சிஷ்யர்கள் என்போர்களாகிய நம்மவர்களிடமே இவைகளுக்கு செலவுக்குவேண்டிய பண்டங்களையும் சம்பாதித்து வருகிறார்கள். இவ்வளவும் செய்தும் அவரிடமுள்ள மதசம்பந்தமான நாணயமோ மிகவும் மோசமானது. தான் மனதில் மாத்திரம் ஸ்மார்த்தராயிருந்துகொண்டு வெளியில் சைவ வேடம் போட்டுக்கொண்டு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத நடவடிக்கைகளை உடையவராயிருக்கிறார்கள்.

மகந்துக்கள் சங்கதியும் உலக குருக்கள் சங்கதியும் இப்படியானால் மற்ற குட்டி சாமியார்கள் ஜீயர்கள் முதலிய வைணவ மடாதிபதிகள் சங்கதி எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதை நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள். இது தவிர இந்த ஆச்சாரியர்களுக்கு கட்டுப்பட்ட மக்களுக்குள்ளாகவே அனேகருக்கு இந்த குருமார்கள் தவிர குலகுரு என்பதாகவும் தங்கள் ஜாதி குரு என்பதாகவும் அனேகருண்டு அவர்களும் இதுபோலவே சஞ்சாரம் என்கிற பெயரை வைத்துக்கொண்டு வருஷத்திற்கு ஒருமுறை பிரயாணம் செய்து குரு காணிக்கையென்பதாக வரி வசூலிப்பதும், வரி அல்லாமல் மடத்திற்கு கடன் அதிகமாய்விட்டது, மழை இல்லை, சாமியார் விலைக்கு வாங்க பட்டத்தை நிலைநிறுத்த, செய்த வியாஜ்ஜியத்தில் கடன் ஏற்பட்டு விட்டது, இரண்டு பெண்டாட்டி கட்டியும் பிள்ளையில்லை, மூன்றாவது கல்யாணத்துக்கு தங்கப் பல்லக்கு செய்யப்பணம் வேண்டும், வெள்ளிப் பாத்திரம் பிருது இவைகளுக்கு பணம் வேண்டும் என்பவைகளான பெயரினால் வசூலிக்கும்பணம் கணக்கு வழக்கில்லை. இம்மாதிரி சாமியார் வரிகள் தினம் ஒன்றுக்கு 4 அணா சம்பாதிக்கும் ஏழைக் கூலியைக் கூட விடுவதில்லை. சாமியார் இல்லாவிட்டால் தங்களுக்கு அவமானம் என்று நினைக்கும்படியாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சாமியார்களின் சொந்த யோக்கியதை ஒழுக்கங்கள் என்ன என்பதைப்பற்றி சிஷ்யர்கள் யாராவது கவனிக்கிறார்களா? ஒரு சாமியாருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தால் அந்த இரண்டு பிள்ளைகளும் உள்ள சிஷ்யர்களை மாடு கன்றுகளை பிரித்துக் கொள்வது போல் ஆளுக்குபகுதியாக பிரித்துக் கொள்ளுகிறார்கள். மேல், கடை சங்கராச்சாரியார்களும் இம்மாதிரியே ஒருவருக்கொருவர் எல்லை பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் எல்லையில் ஒருவர் வந்ததற்காக கோர்ட்டுகளில் விவகாரமும் நடந்து வருகிறது.

இது போலவே சிறு கிராமங்களும் குடும்பங்களும சாமியார்களுக்கு பிரிவினையாகப் படுகிறது. இந்த சாமியார்களில் அனேகம் பேர் தங்களுடைய சஞ்சாரத்தில்தாசிகளை கூட்டிக் கொண்டு போகிறார்கள். சில சாமியார்கள் சஞ்சாரத்திற்கு தாங்கள் போக சவுகரியப்படாமல் தங்களுடைய தாசிகளை அனுப்பிவிடுகிறார்கள்.

அந்த அம்மாசாமியார்களும் சால்வையைப் போர்த்துக்கொண்டு சிஷ்யகோடிகளை தங்கள்காலில் விழச்செய்து பிரசாதம் கொடுத்து காணிக்கை வாங்கி வருகிறார்கள். சில சாமியார்கள் வாரண்டு சேவகர்களுடன் காணிக்கை வசூல் செய்யவும் வாரண்டு கடன் தீர்க்கவும் சஞ்சாரம் செய்கிறார்கள். என் மைத்துனரின் சாமியார் தாசி வைத்திருப்பதால் அடிக்கடி வாரண்டில் பிடிபடுவதுண்டு. எங்கள் குல குரு என்பவர் வருவதற்கு சாவகாசமில்லை என்கிற காரணத்தால் கண் தெரியாத தன்னுடைய 80-வயது தாயாரான விதவைக்கிழவியை அனுப்பி காணிக்கை வசூல் செய்யச்செய்வதும், எங்கள் குடும்பமும் அந்தக்குருட்டுக் கிழவி காலில் விழுந்து காணிக்கை கொடுப்பதும் இன்னமும் நடந்து வருகிறது. என் தகப்பனுருக்கும் தாயாருக்கும் இந்தக் குருடி காலில் விழுவதற்கு வெட்கப்பட்டு வேறொரு சாமியாரை ஏற்படுத்திக்கொண்டார்கள். வேறு சாமியாரும் நல்லாஞ்சக்கிரவர்திகள் என்கிற [illegible] என்று சொல்லிக்கொள்வதானாலும் அதற்கு வேறு இதற்கு வேறு என்பதாக இரண்டு வரி கொடுக்கப்பட்டுவருகிறது. புது [illegible] வைத்துக்கொண்டதாக கேள்விப்பட்ட பழய சாமியார் குடும்பத்தோடு வீட்டிற்கு வந்து "ஹரி இரண்டானாலும் குரு இரண்டாகலாமா" என்பதாக கோபித்து சாபமிடுவதாகப் பயமுறுத்தி அதிகப்பணமும் வாங்கிக்கொண்டார்கள். அந்த சாபத்தால் தான் எனக்கு குழந்தை இல்லை என்றும் நான் குருத்துரோகியாகவும் மகத்துரோகியாகவும் போய்விட்டதாகவும் குருட்டு நம்பிக்கை கொண்ட கிழக்பேசிகள் கொள்ளுகின்றன "திராவிடன்" பத்திராதிபரான ஸ்ரீமான் கண்ணப்பர் அவர்கள் குடும்பத்துக்கு குரு என்கிற ஒரு ஸ்ரீவில்லிபுத்தூர் ஐயங்கார் பார்ப்பனர் ரிவின்யூபோர்டாபீசில் மாதம் 75 ரூபாய் சம்பளத்திலிருக்கிறார். வருஷத்துக்கு ஒரு மாதம் சர்க்காரால் கொடுக்கப்படும் பிரிவிலேஜ் லீவு என்கிற சம்பளத்துடன் உள்ள லீவை உபயோகித்துக்கொண்டு கிராமங்களுக்கு பஞ்சகச்சம் கட்டி ஒரு கிழிந்த சால்வையைப் போர்த்துக்கொண்டு வந்து திண்ணையில் உட்கார்ந்து காணிக்கை வரி வசூலித்துக்கொண்டு மறுபடியும் உத்தியோகத்திற்கு போய் விடுகிறார்.

இவ்வளவு அழிம்பும் அக்கிரமமும் புரட்டும் பித்தலாட்டமும் ஏமாற்றலும் அயோக்கியத்தனமும் செய்து கொள்ளை அடித்துக்கொண்டு போகிற இந்த ஆச்சாரியர், மடாதிபதி, லோககுரு, குலகுரு, சாமியார் இவர்களால் மக்களுக்கு ஏதாவது லாபம் உண்டா என்பதை கவனித்துப்பாருங்கள் இவர்களைப்பற்றி நமது தமிழ்ஆதாரங்களில் ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் எங்கும் கிடையவே கிடையாது. ஆனல் ஆரிய நூல்களிலிருந்தாலும், அது எவ்வளவு ஆபாசமாய் காணப்படுகிறது என்று பார்ப்பீர்களானல் அதன் உண்மை விளங்கும். குரு பத்தினி சிஷ்யன் மேல் ஆசைப்பட்டு அவனைக் கெடுத்ததும், அதற்காக சிஷ்யன் சபிக்கப்பட்டதும் காணப்படுவதும், குருக்கள் ஒருவருக்கொருவர் பொறாமையால் சண்டை போட்டுக் கொள்ளுவதும, குருபத்தினி சம்பந்தம் செய்தால் அது இன்னபாவம் என்றும், அதற்கு இன்ன பிராய்ச்சித்தமென்றும், சிஷ்யனை ஆசைப்பட்டிருந்தால் இன்ன பிராயச்சித்த மென்றும், அந்தம்மளாக ஆசைப்பட்டிருந்தால் இன்ன பிராய்ச்சித்தம் என்றும், புராணங்களும் ஸ்மிருதிகளும் எழுதப்பட்டிருக்கிறதும், அநுபவத்திலும் இம்மாதிரி அக்கிரமங்கள் நடந்தி பலர் பாவத்திற்கு ஆளாவது பிராய்ச்சித்தத்தின் மூலம் பார்ப்பனர்களுக்கு பணம் கொடுப்பதுமல்லாமல் வேறு என்ன லாபம் உண்டாகிறது? ஆத்மார்த்தத்திற்காவது வாழ்க்கைக்காவது ஏதாவது பலன் உண்டா? ஏதாவது உபதேசம் உண்டா? லோககுரு சங்கராச்சாரியார் முதலிய [illegible]ணக்கார குருக்கள்மார்கள், நாம் சூத்திரனானதால்நம்மைப்பார்த்தது குற்றம் நம்முடன் பேசியது தோஷம், நமதுபாஷையாகிய தமிழைஉச்சரித்தது மகாபாவம்என்பதாக கருதுவதும், அதற்காக நம்பணத்தைக் கொண்டே பிராயச்சித்தம் செய்வதும், அதன் மூலம் பார்ப்பனர்களுக்கு தானம் கொடுப்பதும் தவிர வேறு பலன் உண்டா? குலகுரு என்கிறவனும் நமது வீட்டிற்கு வந்தால் நமது பாயின் மேல் உட்காரக்கூட அசிப்பட்டுக் கொண்டு தாவிக்குத்து கீழே உட்காருகிறான். ஆனல் அதே குரு அசுசியான வீதியில் நடந்து வரும் போது காலில் என்னென்வோமிதித்துக்கொண்டுநடந்து வருகிறான். அவன் நடந்து வந்த அசிசுயான தெருவை விட நம்வீட்டுப்பாய் அசிசுயென்பதாக கருதுகிறான். இப்படிப் பட்டவன் காலில் தான் நாம் விட்டம்போல் விழுந்து கும்பிட்டு பணம் கொடுக்கிறோம். இந்த சமயத்தில் குரு நமக்கு உபதேசம் செய்வதென்ன, நம்முடன் பேசுவதென்ன என்பதை கவனித்தீர்களா?

குரு:— சவுக்கியமா?

சிஷ்யன்:— தேவரீர் அனுக்கிரகத்தால் நாயேன் சவுக்கியம்.

குரு:— உனக்கு எத்தனை குழந்தைகள்?

சிஷ்யன்:— நான்கு குழந்தைகள்.

குரு:— பெண் எத்தனை ஆண் எத்தனை?

சிஷ்யன்:— ஒரு பெண் மூன்று ஆண்.

குரு:— ஆண்களுக்கு கல்யாணமாய்விட்டதா?

சிஷ்யன்:- இரண்டு ஆண்களுக்கு கல்யாணமாகிவிட்டது.

குரு:— அப்படியா இரண்டு ஆண்களுக்குகல்யாணமாகிவிட்டதா? அப்படியானல் அது இரண்டு குடும்பம், நீ ஒரு குடும்பம், ஆக மூன்று குடும்பமாகி விட்டது. ஆகவே மூன்று தலைக்கட்டுக்கு தலைகட்டு ஒன்றுக்கு ஒன்றே கால் ரூ வீதம், மூன்றேன் மூன்று, முகால் முக்கால், ஆக மூன்றே முக்கால் ரூபாய் அல்லவா காணிக்கை கொடுக்கவேண்டும். நீ ஒன்றே கால் ரூபாய்தானேவைத்திருக்கின்றாய் இது தர்மமா?

சிஷ்யன்:— சுவாமீ தேவரீர் என்னை மன்

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

1927-ஞு செப்டம்பர்-மீ 17, 18-உகளில் மதுரையில் கூடிய

# சென்னை மாகாண

## 3-வது யாதவர் மகாநாட்டின்

தலைவர், கோயமுத்தூர்
ராவ்சாகிப் எம். வேணுகோபால் பிள்ளை
அவர்கள் நிகழ்த்திய
தலைமைப் பேருரையின் சுருக்கம்.

நீண்ட காலத்திற்கு முன் நான் பள்ளிச்சிறுவனாயிருக்கும் போது சென்னையில் முதலாவதாக நடைபெற்ற இந்திய தேசீய காங்கிரஸ் சபையின் நிகழ்ச்சி விவரங்களைப்பற்றிய புத்தகத்தை ஆதியோடந்தமாய்ப் படித்தேன்.

மாகாண வித்தியாசங்கள் மறைந்துபோய் இப்பெரிய அற்புதமான கண்டத்தில் வதியும் பலவகை மக்களெல்லாம் ஒன்றுபட இந்திய ஜாதியாகக்கலந்து கொள்வரென்றும், வேற்றுமைகளையொழித்து இவர்களெல்லாம் சகோதர வாஞ்சையோடும் பரஸ்பர நன்னம்பிக்கையோடும் ஒத்த கொள்கையினராய்ப் பொது முயற்சிகளில் ஈண்டப்பெறுவரென்றும், பொதுவான லக்ஷியத்தைக்குறித்து பூர்ண ஒற்றுமையோடு உழைப்பரென்றும் நான் அந்நாட்களில் நம்பியிருந்தேன். இந்திய தேசீய காங்கிரஸ் என்னும் அமைப்பினால் மாத்திரமே இது கைகூடுமென்று அக்காலத்தில் உணர்ந்திருந்ததாக நான் நம்புகிறேன்.

ஆனால் தேசீய அமைப்பான காங்கிரசுக்கு எதிரானதோர் இயக்கமாகத் தோன்றிய முதல் முயற்சி மகமதிய சமூகத்தால் தொடங்கப் பெற்றது. இத்தகைய தனிக்கிளர்ச்சியின் முக்கிய நோக்கம் யாதெனில் தங்கள் சமூகத்தின் நல உரிமைகளைக்காப்பதற்குப் போதிய முன்னேற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, அரசியல் துறையில் சிறிதளவு சுதந்திரத்தை யேனும் நாடு முழுவதும் அடைந்தால் அது தங்கள் சமூகத்திற்குப் பெருங்கேடாக விளையும் என்னும் கருத்தேயாம். இவ்வண்ணமே தென்னிந்தியாவிலுள்ள அறிவாளிகளாகிய பிராமணர்கள் நியாயமாகவும் ஒழுங்காகவும் நடந்துகொள்ளமாட்டார்களென்ற சந்தேகமும், ஆட்சிமுறையின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும்போது அதிகாரத்தையும் செல்வாக்கையும் தாமே ஏகபோகமாக அனுபவிப்பார் என்ற பயமும் பிராமணரல்லாதார் இயக்கத்தை நமது மாகாணத்திலும் தோற்றுவித்தன. இவ்வியக்கங்களுக்கு ஆதாரமான சக்தியைச்சிதைக்க வேண்டுமென்று பிரமாதமான முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஆனால் தேசீய ஒற்றுமையின்மைக்குத் தக்க மருந்து மேற்போக்கான முறையில் சிகிச்சை செய்வதல்ல வென்றும், இக்குறிகளை வெளியிடும் நோயை ஆழ்ந்து சோதித்துக்கண்டு பிடித்தல் வேண்டுமென்றும் நான் துணிந்து கூறுவேன். ஒரு சமூகம் தன்னினும் மேற்பட்ட பிற சமூகங்களை நோக்கி அவை அதிகாரமும் செல்வாக்கும் பெற்றுத்தம் சுயநல விருத்திக்கே உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றன என்று நம்புவதுதான் முற்கூறிய பிணக்குகளுக்குக் காரணமாகும். இதன் முடிவுதான் அதிருப்தி என்பது.

ஆகையால் எல்லாவற்றையும் இந்திய மயமாக்கவேண்டுமென்ற கோரிக்கையைப் பின்பற்றி வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் வேண்டுமென்ற கோரிக்கையும் ஏற்படுகின்றது. அதிருப்தியும் மனப்புழுக்கமும் கொண்ட வகுப்பினர் அதிகாரம் வகிப்பவர்களை எவ்வளவு காலம் பின்பற்றிச் செல்லக்கூடும்? இவ்வகுப்பினர் அவர்களோடு ஒத்துழைக்கவேண்டுமெனின் ஆடுகள் கசாப்புக்கடைக்காரனோடு ஒத்துழைப்பதை ஒக்குமென அவர்கள் உணர்தல் கூடுமன்றோ? தத்தம் வலிமையையும்பலவீனத்தையும்கண்டுபிடித்துக்குறைகளை நிவர்த்திப்பதற்கும் வலிமையை வளர்ச்சிக்கேற்ற முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கும் தக்க உபாயங்களை நாடுவதே முறையாகும். ஒவ்வொரு வகுப்பும் வளர்ந்தோங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை சமத்துவமாகப் பெருதல் வேண்டும். ஆனால் அத்தகைய சந்தர்ப்பங்கள் இதர வகுப்புகள் தனக்கு அளிக்குமென்று எதிர்பார்ப்பது பயனற்றதாகும். ஆகவே, நமது நிலையினை ஆராய்ந்து கொண்டு பிறரிடம் காணப்படும் நலன்களைப் பயன் படுத்திக்கொண்டு எல்லாரோடும் சமத்துவ நிலையில் நிற்கும் உரிமையினை நிலை பெறச்செய்வதே நமது முயற்சியாக இருத்தல் வேண்டும். இந்நாட்டில் தெய்வத் தன்மை வாய்ந்தவாது கர்மமாகக்கருதப்படுவது எது? பல்வேறு வகுப்பினரையும் ஒழுக்கவன்மையால் ஒன்றுபட இணைப்பதே தெய்வீக சக்தியின் கடனாகும். உடல் வலிமையாலும் இராணுவபலத்தாலும் பிறரை அடக்கி ஆள்வது ஒருபோதும் தெய்வீக சக்தியாக இந்தியாவில் கருதப்படவில்லை.

நமது சமூகத்தினைச் சீர்திருத்த வேண்டிய வழிகளைப்பற்றி இப்போது ஆராயப்புகுவோம். இப்பொழுது யாதவர்கள் பெருந்தொகையினராயினும் இவர்கள் பேரோ வெளிப்படையாகத் தெரியவில்லை. காரணமென்னை? நாமெல்லாம் ஒடுங்கிக்கிடக்கின்றோம். நாம் கிளர்ச்சி செய்ய வேண்டும். நமது நிலையினை நாடறிய எடுத்துரைத்தல் வேண்டும். இதற்கு முதன் முதல் வேண்டுவது கல்விப்பயிற்சியேயாகும். ஒருவனை நல்ல உபயோகமுள்ள பிரஜையாக விளங்கச்செய்து தன் ஜீவனோபாயத்தைச் செம்மையாகவும், அறிவுடனும் நடத்துவதற்கு அவனுக்கு வசதியளிப்பதற்கேற்ற இன்றியமையாத கல்வியினை எப்படியாவது கொடுத்தே தீர்தல் வேண்டும். அன்னையர் மனம் தக்க முறையில் பயிற்சி பெற்றிருந்தாலன்றி குழந்தைகளுக்குரிய பயிற்சியை அவர்கள் அளித்தல் இயலாதன்றோ. இளைஞரில் அறிவாளிகளை உயர்தரக்கல்வியின் பொருட்டும் அன்னிய நாடுகளுக்கனுப்பும் பொருட்டும் நம்மவர்கள் உதவிச்சம்பளங் கொடுத்து உதவுதலும் வேண்டும்.

நமது முன்னோர்களின் பெருந்தொழிலினைப் பின்பற்றும் நம்மினத்தவர் கால் நடைகளை நவீனசாஸ்திர முறைப்படி வளர்த்து விர்த்தி செய்வதின் அவசியத்தை நன்குணரவேண்டும். நமது இளைஞரில் சிலரை ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்குச்சென்று கால் நடை வளர்ப்பினைக் குறித்த சாஸ்திரீய முறையைக்கற்றுவரச்செய்து இங்கே பரவச்செய்யுமாறு தூண்டுதல் வேண்டும்.

குடிசைக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வது பொருளாதார நிலையை வளப்படுத்துவதாகும. இச்சந்தர்ப்பத்தில் தற்காலத்தில் நமது நாட்டினரால் அதிமுக்கியமானதாகக் கருதப்படும் ஒரு விஷயத்தை நான்குறிப்பிடவில்லையெனில் என் கடமையைச் செய்வதில் நான் தவறினவனாவேன் எனக்கருதுகிறேன். அது வேறொன்றுமில்லை: இந்தியாவின் விடுதலைக்கு மார்க்கமென்று எல்லோராலும் போற்றப்படும் சபர்மதி அடிகளாகிய மகாத்மா காந்தியால் சொல்லப்பட்ட இராட்டினம், கதர் இவற்றைக் குறித்த தெய்வீக உபதேசமேயாகும். மகாத்மாவின் கொள்கையில் மற்றொன்றையும் இங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அது தீண்டாமை விலக்கு. கவி ரவீந்திரநாதர் கூறுகிறார்:— "இந்தியர் வரலாற்றில் பொருள் பொதிந்ததோர் அரிய உண்மையுண்டு. விஷ்ணுவின் மக்கள் உருவந்தாங்கிய அவதார புருஷர்களெல்லாம் தங்கள் வாழ்க்கையினாலும் உபதேசத்தினாலும் புரோகிதமதத்தின அரண்களைத் தகர்த்தெறிந்து செல்வாக்குள்ள வகுப்பினருக்கும் தாழ்ந்த வகுப்பினருக்கும் உள்ள தொடர்பினை ஒப்புக்கொண்டவராவர்" எனவே வைஷ்ணவர்களாகிய நமது கடமை யென்னவெனில் நாம் பின் பற்றியொழுகும் அன்பு மதத்தோடு முற்றும் முரண்படுவதான 'தீண்டாமை' என்பதை ஒழிப்பதில் நாம் முழு ஊக்கத்தோடு முனைந்து நிற்பதேயாகும். பழைய காலத்தில் மிக நல்லனவாயும் உபயோகமுள்ளனவாயுமுள்ள பல வழக்கங்கள் காலவகையால் இப்பொழுது பயனற்றனவாகவும் தீமை பயப்பனவாகவும் மாறிவிட்டன. நமது சுற்றுப்பொருள்களுக்கு ஏற்றவாறு நம்மை நாம் இசைவித்துக்கொள்ளும ஆற்றலிலேயே நமது அபிவிருத்தி பொருந்தியிருக்கின்றது. உயிர் நூலின் விதியான இச்சாதாரண விதியினை நாம் புறக்கணித்தால் நமது நிலை வளர்ச்சியின்றி அழிந்துபோம். பழைய வழக்கம் என்பதற்காக அதனைப்பற்றிக்கொள்ளும் அடிமை யுணர்வினின்றும் நமது மக்களை நிச்சயமாக விடுவிப்பது பாலிவளரும் கல்விப்பயிற்சியேயாகும். ஆகையால் எல்லா நன்மைகளையும் அருளும் எல்லாம் வல்ல எம்பெருமான் மீது நமது ஆசையாக நம்பிக்கையினைவைத்து உழைக்க முற்படுவோம்.

### தீர்மானங்கள்.


(1) ராஜ விஸ்வாச பிரமாணம் செய்து கொள்ளப்பட்டது. (2) "யாதவகுல மித்திரன்" என்னும் பத்திரிகையை எல்லா யாதவர்களும் ஆதரிக்க வேண்டுமாயும், (3) பசுக்கள் மேய்வதற்கு வேண்டிய வசதிகளைக் கவர்ன்மெண்டார் செய்துகொடுக்கவேண்டு மென்பதாகவும், (4) யாதவர்கள் 16 லட்சம் பேர்களிருந்தும், சிதறுண்டுகிடப்பதால் சட்ட சபையில் யாதவ வகுப்பாருக்கு 2 சீட் நாமிநேஷன் மூலம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அல்லது தனி தொகுதி எலக்ஷன் நடத்தவேண்டு மென்றும், 5) ஜில்லாபோர்டு, தாலூகா போர்டு, முனிசிபாலிட்டி, யூனியன் இவைகளில் போதுமான அளவு யாதவர்களுக்குச் சீட்டுக் கொடுக்கவேண்டுமாயும், (6) சர்க்கார் உத்தியோகங்களில் யாதவர்கள் மிகவும் குறைவாயிருக்கும் உத்தியோகங்களில் நியமிக்கவேண்டுமாயும், (7) ஏராளமான தர்ம ஸ்தாபனங்களில் யாதவர்கள் பங்கெடுத்துக் கொண்டிருத்தலால் தற்போதுள்ள அற நிலைய பாதுகாப்பு மசோதா சழகத்திலும் தங்கட்கு ஸ்தானங்கள் கொடுக்கப்படவேண்டு மென்பதாகவும், (8) ராயல் கமிஷனில் ரிப்போர்ட்டு கொடுக்கும் விஷயமாக தாய்ச் சங்கத்திலிருந்து மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும்படியாகவும், (9) யாதவர் சங்கங்கள் எல்லா ஜில்லா, தாலூகா, கிராமங்களிலும் நியமிக்க வேண்டுமாயும், யாதவகுல ஒற்றுமைக்குக் கல்விச்சங்கம் வேண்டுவதன் அவசியத்தைப் பற்றியும் தீர்மானங்கள்செய்யப்பட்டன.

மகாநாடும் மிகச்சிறப்பாக முடிவுற்றது. மதுரை யாதவ மகா ஜனங்களுக்கு இஃது ஓர் புதிய உணர்ச்சியை அளித்திருக்கிறது.

---

**தென்னாப்பிரிக்காவில் பார்ப்பனர் சமத்துவம் கேட்கிறார்கள்.**

**இந்தியாவில் பார்ப்பனர் தெரு வழி விடுவதில்லை.**



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ புரட்டாசி 9உ

## சுயமரியாதைக்கு சத்தியாக்கிரகம்.

### வாலிபர்களுக்கு விண்ணப்பம்.

பார்ப்பனரல்லாத மக்களின் சுயமரியாதைக்காக சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்பதாக பார்ப்பனரல்லாத வாலிபர் பலர் உள்ளத்தில் ஆத்திரம் பொங்கித் ததும்பிக்கொண்டிருக்கிறது. இவ்விதமான உணர்ச்சியைக் கண்டு நாம் மிகுதியும் மகிழ்ச்சி உறுகிறோம். ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையும் மதுரை அருணாசலமும், விண்ணப்பமும் வேண்டுகோளும் விடுத்த பிறகு பல வாலிபர்கள் தங்கள் தங்கள் பெயர்களைக்கொடுத்து சத்தியாக்கிரகத்தை சடுதியில் ஆரம்பிக்கும்படியாகச் சொல்லி தங்கள் உற்சாகத்தைக் காட்டி வருகிறார்கள். தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு பயனுள்ள வேலை செய்யவேண்டுமானால் அது சத்தியாக்கிரகத்தைத் தவிர வேறில்லை என்பதை நாம் மனப்பூர்த்தியாக ஒப்புக்கொள்ளுகிறோம். நமது நாட்டில் ஆசாரச்சீர்திருத்தமும் அரசியல் சீர்திருத்தமும் ஆரம்பித்து எவ்வளவு காலமாய் நடைபெற்று வருகிறது? இவ்விரண்டிற்காக நமது மக்கள் செலவழித்தகாலம் பொருள் எவ்வளவு? இவ்வளவு ஆகியும் இதன் பெயரைச்சொல்லிக்கொண்டு ஒவ்வொரு தலைவர் என்போரும் மக்களை ஏமாற்றி தன் தன் சுய நலத்திற்கு வழிதேடிக் கொண்டார்களே யல்லது நாடு அடைந்த பலன் என்ன? நாட்டில் மதிக்கத்தகுந்த ஒவ்வொரு பரியாரும் ஆசாரத்திருத்தம் ஏற்படவேண்டும், தீண்டாமை ஒழியவேண்டும், யாவருக்கும் சம உரிமை அளிக்கப்பட வேண்டும், வைதீகப்பிடிவாதங்கள் ஒழிய வேண்டும், அதில்லாவிட்டால் விடுதலையில்லை, சுயராஜ்யமில்லை என்பதாகப் பேசியும் எழுதியும் இருக்கிறார்கள். இதை நாடு ஒப்புக்கொண்டிருப்பதாகவும் குறிப்பு காட்டி இருக்கிறார்கள். அநேக மகாநாடுகளில் இதைப்பற்றிய தீர்மானங்களை ஏகமனதாய் நிறை வேற்றியும் இருக்கிறார்கள். இவற்றைச் செய்த பெரியார்கள் மக்களால் மதிக்கப்பட்டும் வருகிறார்கள். ஆனால் அனுபவத்தில் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது? இன்று வரை ஒருகாரியமும் இல்லையே. இக்குற்றங்கள் நீங்க முன்னோர்கள் பாடுபட்டது இன்று நேற்று? ஆயிரக்கணக்கான வருஷங்களாய் பாடுபட்டு வந்திருப்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள் இருந்து வருகிறது. அவ்வாதாரங்கள் எல்லாம் மதிக்கப் படுகிறது. பூஜிக்கப்படுகிறது. ஆனால் பலன் என்ன? என்று மறுபடியும் கேட்கிறோம்.

ராமாயணத்தில் குகனுடன் ராமர் சரிசமமாய் உட்கார்ந்திருந்தார் என்கிறார்கள்.

பாரதத்தில் விதுரன் வீட்டில் கிருஷ்ணன் சாப்பிட்டார் என்கிறார்கள்.

பாகவதத்தில் திருப்பாணர் ஆழ்வாரானார் என்கிறார்கள்.

திருவிளையாடல் புராணத்தில் நந்தனார் அறுபத்து மூவரில் ஒருவராகி நாயனாராயிருக்கிறார் என்கிறார்கள்.

இவ்விருவரும் கோயில்களில் பூஜிக்கப் படுகிறார்கள் என்கிறார்கள். பெரிய புராணத்தில் ஜாதியில்லை என்று சொல்லி இருக்கிறது என்கிறார்கள்.

உமாபதி சிவம் பெத்தான் சாம்பானுக்கு முத்தி கொடுத்ததாய் சொல்லுகிறார்கள்.

கபிலர் பார்ப்பனனுக்கும் பறையனுக்கும் வித்தியாசமில்லை என்று சொன்னதாக சொல்லுகிறார்கள்.

அவ்வை 'ஜாதி யிரண்டொழிய வேறில்லை' என்று சொன்னாள் என்கிறார்கள்.

திருவள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொன்னதாக சொல்லுகிறார்கள்.

இராமலிங்க சுவாமிகள் 'ஜாதி குலம் பேசும் சகடர்கள்' என்று பாடியதாகச் சொல்லுகிறார்கள்.

திருநாவுக்கரசு நாயனார், 'சாத்திரம் பல பேசும் சளக்கர்காள் கோத்திரமும் குலமுங்கொண் டென்செய்வீர்கள்' என்று கேட்டதாகச் சொல்லுகிறார்கள்.

இவைகளுக்கெல்லாம் ஆதாரமும் காட்டுகிறார்கள்.

மதாச்சாரியார்கள் என்போர்களான ராமானுஜர், ஜாதி வித்தியாசமில்லை என்று சொல்லி பறையர்களை யெல்லாம் பிடித்து, நாமம் போட்டு, பூணூல் போட்டு, பஞ்சகச்சம் கட்டச்செய்து, அய்யங்காராக்கினதாகச் சொல்லுகிறார்கள்.

சங்கராச்சாரியார் தீண்டாமை இல்லை என்று சொன்னதோடு பறையனது காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டதாக சொல்லுகிறார்கள்.

இந்து மதத்திலேயே தீண்டாமை இல்லை என்கிறார்கள்.

மகமதியம், கிறிஸ்தவம், பௌத்தம், சமணம், பாரசீகம், சீக்கியம், ஆரிய சமாஜம், பிரமசமாஜம் முதலிய மதங்களிலெல்லாம் தீண்டாமை இல்லை என்கிறார்கள்.

அறிவாளிகளான தயானந்த சரஸ்வதி, ராஜாராம மோகனராய், விவேகானந்தா, ராமதீர்த்தா, ராமகிருஷ்ண பரம அம்சா, ஜோதிரும் பூலே, ரவீந்ரநாத் டாகூர், காந்தி முதலிய மகாத்மாக்கள் தீண்டாமை இல்லை என்று சொன்னதாக சொல்லுகிறார்கள்.

இவைகள் தவிர, வேதத்தில் தீண்டாமை இல்லை, கீதையில் தீண்டாமை இல்லை, சைவத்தில் தீண்டாமை இல்லை, வைணவத்தில் தீண்டாமை இல்லை என்றும், சொல்லுகிறார்கள். இவ்வளவு மதங்களும் இவ்வளவு மதாச்சாரியார்களும் இவ்வளவு பெரியார்களும் இவ்வளவு ஆதாரங்களும் தீண்டாமை இல்லை என்று சொல்லியும் எழுதியுமிருந்தும் நமது நாட்டில் மாத்திரம் பிரத்தியக்ஷத்தில் தீண்டாமைப் பேய் இருக்கிறதா இல்லையா? என்று பாருங்கள். தீண்டாமை மாத்திரம் என்று சொல்ல முடியுமா? தீண்டாமை, பேசாமை, நடக்காமை, நிழல் மேலே படாமை, கண்ணில் தென்படாமை முதலியவைகள் இருக்கிறதா இல்லையா? அதுவும் கோவில், குளம், பள்ளிக்கூடம், தெருவு முதலிய இடங்களிலும், பூச்சி, புழு, நாய், கழுதை, பன்றி, மலம், மூத்திரம் முதலியவைகள் இருப்பதற்கு நடப்பதற்கு மலஜலம் கழிப்பதற்கு ஆட்சேபணையில்லாததுமான இடங்களில் எல்லாம்கூட தீண்டாமைப் பேய் இருக்கிறதா இல்லையா? சோத்துக்கடை, காப்பிக்கடை, ரயில் வண்டி முதலிய இடங்களில் இருக்கிறதா இல்லையா? இதற்காக எத்தனையோ காலமாய் எத்தனையோ பேர் பாடுபட்டும் முடியாமலிருக்கிறதா இல்லையா?

ஏன் இப்படி இருக்கிறது என்பவைகளை யோசித்துப் பாருங்கள். வாலிபர்களே! உங்களைத்தான் கேட்கிறோம். தயவுசெய்து யோசித்துப் பாருங்கள். இவற்றைப் போக்கடிக்க யோக்கியமான முறையில் சரியான விலை கொடுக்க முன்வந்து நீங்கள் யாரும் இதுவரை முயற்சிக்கவேயில்லை என்பதும், அதனால்தான் அது (தீண்டாமை) இன்னமும் நமது நாட்டில் நமது உருவமாகவே விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியவரும். எனவே இதைப்போக்கடிக்க வேண்டாமா? வேண்டுமென்பீர்களானால் உங்கள் கையில் புஸ்தகம் கூடாது. நீங்கள் இது முடியும் வரையில் நீங்கள் படிக்கக்கூடாது. பள்ளிக்குப் போகக்கூடாது. கோவிலுக்குப் போகக்கூடாது. ஏன் என்று கேட்பீர்களானால் நீங்கள் எவ்வளவு படித்து எவ்வளவு உத்தியோகம் பார்த்து எவ்வளவு பெரியமனிதனாகி எவ்வளவு பக்திமானாகி கடவுளோடு கடவுளாய் உரைந்துகொண்டிருந்தாலும் தீண்டாமை யென்பது ஒருக்காலும் உங்களைவிட்டுப் போய்விடாது. ஜஸ்டிஸ் கிருஷ்ணன் ஐகோர்ட் ஜட்ஜ் வேலைபார்த்தும் தீண்டாதவராய்த்தான் செத்தார். அவர் பிள்ளை குட்டிகள் இன்னமும் தீண்டாதவராய்தான் இருக்கிறார்கள். மந்திரி முதலிய பெரிய உத்தியோகம் பார்த்தவர்கள் எல்லாம் இப்பொழுது தீண்டாதார்களாகிய சூத்திரர்களாய்த்தானிருக்கிறார்கள். பார்ப்பனரல்லாத மடாதிபதிகள் தம்பிரான்கள் எல்லாம் என்னதான் ஸ்ரீலஸ்ரீ பட்டமிருந்தாலும் சூத்திரர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். மைசூர், புதுக்கோட்டை மகா ராஜாக்களெல்லாம் சூத்திரர்களாய்த்தான் இருக்கிறார்கள். மகாத்மா காந்தியை உலகமெல்லாம்போற்றினாலும் அவரும் தீண்டாதார் என்பதை மறந்துவிடாதீர்கள். இந்த நிலையில் நீங்கள் படித்து என்னசெய்யப்போகிறீர்கள்? யாரைக் காப்பாற்றப் போகிறீர்கள்? நீங்கள் பாசானதாகவே வைத்துக்கொள்ளுங்கள். பெரிய உத்தி

யோகம் பார்த்துப் பணம்சம்பாதித்து அரசபோகம் அனுபவித்ததாகவே வைத்துக் கொள்ளுங்கள். சாகும்போது யாராய்ச் சாவீர்கள் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். குற்றமற்ற மனிதனாய்ப் பிறந்து இருந்தும், சூத்திரர்களாய், தீண்டாதவர்களாய், பார்ப்பனர்கள் வைப்பாட்டி மக்களாய்மிருகத்திலும் தாழ்ந்தவர்களாய் மனிதத்தன்மை அற்றவர்களாய், சுயமரியாதை இல்லாமல்தான் சாவீர்களா அல்லது வேறு விதமாய் சாவீர்களா? என்பதை நினைப்புக்குக் கொண்டுவாருங்கள். நீங்கள் எவ்வளவு பணந்தேடி வைத்திருந்தாலும் உங்கள் பிள்ளைகளும் குட்டிகளும் அப்படித்தான் சாகுமா? வேறு விதமாய்ச் சாகுமா? என்பதையும் யோசித்துப்பாருங்கள் எனவே உங்கள் போக போக்கியமும் வாழ்வும் பணமும்பதவியும்பட்டமுமஎன்ன செய்வதற்கு? ஒரு நாய்க்கு இருக்கிற யோக்கியதை உங்களுக்கு இல்லையென்று ஒப்புக்கொள்ளுகிற நீங்கள், ஒரு பன்றிக்கிருக்கிறயோக்கியதை உங்களுக்கில்லையென்று ஒப்புக்கொள்ளுகிற நீங்கள் இதைப் பெறாமல் எதற்காக இருக்கிறீர்கள் என்பதற்காகத்தான் படிப்பைவிட இதை முக்கியமாய் கவனியுங்கள் என்கிறோமேயொழிய வேறில்லை. முதலில் தீண்டாமையைவிட இழிவானசூத்திரத்தன்மையை ஒழிக்க முயலுங்கள். அதற்குத் தக்கவிலை கொடுங்கள். ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்துவரும் அக்கிரமத்தை மேடைப்பேச்சினாலும் பத்திரிகைப் பிரசுரத்தினாலும் புராண உபதேசத்திலும் தீர்த்துவிடலாம் என்று எண்ணுவது அறியாமையேயாகும். அதனால்தான் மேல்கண்ட இத்தனை பெரியோர்களின் உபதேசமும் கட்டளையும் பாடல்களும் படிப்பினைகளும் ஆதாரமும் ஒருகூட்டத்தாரின் வயிறுவளர்ப்புக்கு உதவுகிறதே யல்லாமல் தீண்டாமையை அசைக்கக்கூட முடியவில்லை. தீண்டாமையிலிருந்து விலகுவதேதான் சுயராஜ்ஜியம். அதுவேதான் விடுதலை : அதுவேதான் உரிமை : அதுவேதான் சுயமரியாதை என்பதை உணருங்கள். விடுதலை சும்மாகிடைக்காது. உயிரை விடவேண்டும். இரத்தம் சிந்தவேண்டும், வெட்டுப்பட வேண்டும், குத்துப்படவேண்டும், சுட்டுக்கொல்லப்படவேண்டும், ஜெயிலில் சாகவேண்டும். இம்மதிரி காரியமில்லாமல் உண்மையில் விடுதலை பெற்ற நாடு எது? ஜாதி எது? சுயமரியாதைபெற்ற சமூகம் எது? என்பதை யோசியுங்கள். இதற்குத்தயாராயிருக்கிறீர்களா? இருக்கமுடியுமா என்று உங்கள் வீரமுள்ள பரிசுத்தமான மனத்தைக்கேளுங்கள். அது சம்மதங்கொடுத்தால் உடனே உங்கள் புஸ்தகத்தை மூட்டை கட்டி வைத்து விட்டு சத்தியாக்கிரகத்தை நடத்த வாருங்கள். நாங்கள் வரத்தயாரா யிருக்கிறோம் என்று எழுதுங்கள். இப்படிச் செய்வீர்களானால இங்குமாத்திரமல்லாமல் எங்குமே தீண்டாமை என்கிற வார்த்தையே இல்லாமல் செய்து விடுவீர்கள். சூத்திரத்தன்மை ஒழித்தவர்களாவீர்கள். வாலிபர்களாகிய உங்களால்தான் இந்தப் பெரிய காரியம் செய்ய முடியும். வாலிபர்களாகிய நீங்கள்தான் கோடிக்கணக்கானமக்களுக்கு மனிதத்தன்மையையும்சுயமரியாதையையும்விடுதலையையும்சம்பாதித்துக்கொடுக்க யோக்கியதையுடையவர்கள். எனவே தியாகத்திற்கு, அஹிம்சையும் குரோதமும் துவேஷமுமற்ற தியாகத்திற்கு தயாராகுங்கள்

## காந்தியும் வருணாசிரமமும்.

“ஜஸ்டிஸ்” பத்திரிகையில் ஒரு கண்ணிய நிருபர் எழுதுகிறார்

அன்பார்ந்த ஐயா,

வருணாசிரம தரும விஷயமாய் திரு. காந்தியின் மனப்பான்மையைப் பற்றி தாங்கள் “ஜஸ்டிஸ்” பத்திரிகையில் கண்டித்தெழுதியிருப்பது மிகவும் பொருத்தமானதே. வருணாசிரமம் என்று சொல்லப்படுகிற விஷமக் கட்டுப்பாடு புராதன இந்தியாவில் கிடையவே கிடையாது. பூர்வ திராவிட சாஸ்திரங்களிலும் ஆரிய நூல்களிலும் அதைப்பற்றிய பேச்சே காணப்படவில்லை. அது பின்னர் உற்பத்தியான ஒரு கற்பனைக்கதை. இந்திய நாகரீகம் என்னும் அழகிய கனிதரும் விருட்சத்தைக்கெடுக்க ஒருமாவெட்டுக்கொடியாக (புல்லுருவி) அது தோன்றியது. முன்னொருகாலத்தில மற்றவர்களுக்கில்லாத விசேஷ உரிமைகளை அநுபவித்து வந்த சில குடும்பத்தார் அந்த உரிமைகளை யெல்லாம் எந்நாளும் தங்கள் குடும்பத்தாருக்கே சொந்தமாக்கிவிட முயற்சித்தபோது அவர்களது சுயநலம் மிகுந்த குறுகிய மனத்தினிடை தோன்றிய இந்த விஷமப் புழு முதல் முதலாக ஆரிய வகுப்பை அணுகிக் கெடுத்து பின்னர் காலக்கிரமத்தில் திராவிடதேசத்திலும் கொண்டுவந்து பரப்பப்படலாயிற்று. இப்போது அது இந்திய ஜனங்களின் உயிரையே உறிஞ்சிக்கொண்டிருக்கிறது. இந்தியரின் பலவீனத்துக்கும் க்ஷீணத்துக்கும் அதுவே காரணமாகும்.

ஸ்மிருதி இதிகாச புராணங்களில் காணப்படுகிற வருணாசிரம தருமம் என்ற சொற்றொடர் இந்து மதத்தை ஒப்புக்கொள்ளுகிற வாழ்க்கை நிலைக்குத் தக்கவருணமாக (ஜாதி) பிரிக்கப்பட்டிருக்கிற நாலு வகுப்பு ஜனங்களும் அனுட்டிக்கவேண்டிய ஆசார முறைக்குக் குறிப்பிடும் சட்டமாகும். ஆனால் வருணாசிரம தர்மம் என்ற இந்த சொற்றொடர் சூத்திரங்களில் அதாவது வேதங்களில் காணப்படுகிறதில்லை. சமஸ்கிருதச் சொல்லாகிய வருணத்திற்கு நிறம் என்று பொருள். ஆதியில் நிறபேதத்தை ஆதாரமாகக்கொண்டே ஜனங்களை வெவ்வேறு ஜாதியாகப் பிரித்ததாகத் தோன்றுகிறது. அந்தக்காலத்தில் வெள்ளை ஜாதி (பிராமணர்) சிவப்புச் சாதி (க்ஷத்திரியர்) பொதுநிற ஜாதி (வைசியர்) கருப்பு ஜாதி (சூத்திரன்) ஆக நாலு ஜாதிகளிருந்தன ஆனால் காலம் செலவச் செல்ல கருப்புக் குழந்தைகள் வெள்ளைக்குடும்பங்களிலும், வெள்ளைப் பிள்ளைகள் கருப்புக் குடும்பங்களிலும் பிறக்க ஆரம்பிக்கவே அதிலிருந்து பிறப்பை ஆதாரமாகக்கொண்டே வகுப்புப் பேதம் அனுஷ்டிக்கப்படலாயிற்று. எனவே பிறப்பு விஷயத்தில் சம்பந்தமுள்ள வகுப்பாரைக் குறிக்கும் ஜாதியென்ற சொல்லும், ஒரே நிறமுள்ள வகுப்பாரைக் குறிப்பிடும் வர்ணம் என்றசொல்லும் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களாக மாறிவிட்டன. அதெவ்வாறாயினும் முதலிலிருந்த வருணாசிரம தர்மக் கட்டுக்கதைக்கும் தற்காலத்திய ‘பிறந்தடை’ என்ற கட்டுக் கதைக்கும் வித்தியாசம் இல்லை. ஆகையால் ‘பிறந்தடை’யைக் கண்டிக்கிற திரு காந்தி அவர்கள் வருணாசிரம தருமத்தைப் போற்றித் திரிவதுதான் விந்தையாயிருக்கிறது. ஆனால் நூறு காந்திகள் தோன்றி வருணாசிரம தர்மத்தை ஆசீர்வதித்தபோதிலும் அது இந்து சமூகத்திற்கு ஒரு சாபத்தீடாயிருந்துவருகிறதென்பதில் சந்தேகமில்லை. நாட்டு ஜனங்களில் பெரும்பான்மையோரான சூத்திரரை வருணாசிரம தர்மம் அடிமைகளாக்கி விட்டது. அது அவர்கள் முன்னேற்றத்தை வழிமறித்திருக்கிறது. அது அவர்களை வெட்கங்கெட்ட சிறுமை வாழ்க்கை நடத்தும்படி செய்து வருகிறது.

வருணாசிரம தர்ம விதிகளின் படி சூத்திரர்கள் இந்து வேதங்களைப் படிக்கக் கூடாதென்றும், மற்றவர்கள் படிப்பதைக்கேட்கக்கூடாதென்றும் மதத்தினாலேயே தடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, அவர்கள் கல்வி கற்கவும் கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர்கள் சொந்த சம்பாதிக்கத்தக்க திறமையுள்ளவர்களாயிருந்தாலும் அப்படியவர்கள் சொத்து சம்பாதித்தால் அவர்களுக்கு பாவம் ஏற்பட்டுவிடுமாம். பார்ப்பன எஜமானர்கள் சாப்பிட்டு மீதிவைத்த எச்சிலையுண்டு அவர்கள் உடுத்திக்கழித்த துணிகளையுடுத்தி திருப்திப்படுவதே சூத்திரர் கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது ஸ்மிருதிகளில் இவ்வித விதிகள் டஜன் கணக்காயிருக்கின்றன. நமது சுயமரியாதைக்கு இவைகளெல்லாம் அருவருப்பைத்தருவனவல்லவா? ஆனாலும் புத்த பகவான், ராம்மோகனராய், சுவாமி விவேகாநந்தர், ஜோதிராம்பூல், தியாகராஜ செட்டியார், டாக்டர் நாயர் முதலியபெரியார்களுடைய முயற்சியினாலும், பொது ஜனங்களுக்குள் ஏற்பட்டுள்ள அறிவு வளர்ச்சியினாலும் இந்த விதிகளெல்லாம் தற்காலம் சாதாரண அனுஷ்டானத்திலில்லை. அப்படியிருந்தாலும் இப்போதுங்கூட இந்த விதிக்காக நமபுகிற சிலர் நமக்குள் இருக்கிறார்கள் என்பதை கவனிக்கும் போதும் மனம் வருந்துகிறது. மேலும் இந்தக் குருட்டாட்டமான பேதங்களினால் ஜனங்கள் தனித்தனி ஜாதிகளாகவும், ஜாதிக்குள் பல உட்பிரிவுகளாகவும் பிரிந்து வெவ்வேறு கொள்கையும் லட்சியமுமுள்ளவர்களாயிருப்பதால் நாட்டிலே தேசிய உணர்ச்சி வளாவதற்கு பெரிதும் தடையாயிருக்கிறது. இந்தப்பாழான பிரிவினைகளும், நாட்டு ஜனங்களில் பெரும்பான்மையோர் இருக்கும் சிறுமை நிலையுமே இந்தியா பல நூற்றாண்டுகளாக அன்னியராட்சிக்

குஅடிமைப்பட்டிருப்பதற்குக்காரணமாகும். அப்படியிருக்க, திரு காந்தி அவர்கள் இந்த வருணாசிரம தர்ம கட்டுக் கதையை ஆதரிக்க வேண்டியதென்ன? திரு. காந்தி தமது வருணாசிரம தர்மம், தீண்டாமையை ஒழிப்பதையும், தாழ்ந்த ஜாதியாருக்கு உரிமை கொடுப்பதையும், ஒடுக்கப்பட்ட வகுப்புப் பெண்களை வீட்டில் வைத்துவளர்ப்பதையும் தடை செய்யவில்லை என்று கூறுகிறார், இதெல்லாம் நல்லது தான். ஆனால் வருணாசிரமத்தால் ஏற்பட்டுள்ள மற்ற கெடுதிகளுக்கு என்ன செய்வது?

சில வேதங்களில் வருணாசிரம தர்மவாதிகள் பகவத்கீதையில் ஜாதிப்பாகுபாட்டைப் பற்றிச் சொல்லியிருப்பதை தங்களுக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறார்கள். ஆனால் ஜாதிப்பிரிவினையைப் பற்றி ஸ்ரீ கிருஷ்ணன் கூறியிருப்பதென்ன? அவர் சொல்லியிருப்பது தெளிவாயிருக்கிறது. ஜனங்களின் குணாகுணங்களுக்கும் செயல்களுக்கும் தக்கதாய் தான் நால்வகை ஜாதிகள் ஏற்பட்டிருப்பதாய் அவர் கூறியிருக்கிறார். பிறப்பை ஆதாரமாகக் கொண்ட ஜாதிப்பிரிவினையை அவர் ஒப்புக்கொள்ளவே இல்லை. எனவே ஸ்ரீ கிருஷ்ணன் கூறியிருப்பது தற்காலம் வழக்கத்திலிருக்கிற ஜாதிக்கட்டுப்பாட்டை மறுக்கிறதேயன்றி வேறல்ல. அப்படியிருக்க, கற்றுணர்ந்தவரான திரு. காந்தி, மறைந்து போய்க் கொண்டிருக்கும் இந்த (பிறப்பை ஆதாரமாய் கொண்ட) வருணாசிரம தர்மக் கட்டுப்பாட்டை ஆதரித்து உயிர்ப்பிக்க முன் வந்திருப்பதின் காரணமென்னவென்று எனக்கு விளங்கவில்லை பூர்விகமாகவே தங்களுககு விசேஷ சிலாக்கியங்களும் உரிமைகளுமுண்டென்று பெருமைபாராட்டும் சில சூழ்ச்சிக்காரர் அந்த உரிமைகளையும் சிலாக்கியங்களையும் தங்களுடைய பிள்ளைகளுக்கும் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் பிரத்தியேகப்படுத்தி பாதுகாப்பதற்காக திரு. காந்தியை "பலிகடா"யாக உபயோகப்படுத்துகிறார்களென்று எனக்கு சம்சயமுண்டாகிறது. திரு. காந்தி தீண்டாமை விலக்கு, தாழ்ந்த ஜாதியாருக்கு உரிமை, ஒடுக்கப்பட்ட வகுப்பு பெண்களைவளர்த்தல் என்ற நிபந்தனைகளுடனே வருணாசிரமதருமத்தை ஒப்புக்கொள்ளுகிறதானாலும் அந்தக்கட்டுப்பாட்டின்படி அவர் ஜனங்களுக்கு தருமத்தைப்பிரசங்கிக்க அருகதையுடையவரல்லவென்பது அவருக்கு தெரியாமல் போனதென்ன? அப்படியாயின் அவர் "தரிசனம் சேவை" என்ற மரியாதைகளுடன் ஜனங்கள் நல்வழியிலோ அலைது தப்பு வழியிலோ போகும்படி பிரசங்கங்கள் செய்து கொண்டு சுற்றித்திரியக் கூடாதல்லவா? வருணாசிரம தருமம என்ற கட்டுக்கதையின் படியும, கலியுகத்தில் பிராமணர் சூத்திரர் என்ற இரு ஜாதிகள் தான் உண்டென்ற கட்டுக் கதையின் படியும், நமக்கு தருமத்தைப் பிரசங்கம் செய்ய உரிமையில்லை என்பதை திரு. காந்தி ஞாபகத்தில் வைகக வேண்டும் அவர் பணியாரத்தைத தின்னவும் வேண்டும், அதே சமயத்தில் அதைக் கையில் வைத்துக் கொண்டிருக்கவும் வேண்டுமெனறால் முடியாத காரியம். அதுபோகட்டும் அதைப்பற்றி நமக்குக்கவலை இல்லை. ஆனால் அவருடைய தோற்றத்தையும் பட்டத்தையும் பார்த்து பரவசப்படுகிற படிப்பில்லாத பாமர ஜனங்கள் மனதிலே அவர் பிரசங்கங்களால் என்ன மாறுதல் நேரிடுமோ என்பது தான் நமக்கு சஞ்சலத்தைக்கொடுக்கிறது. அவர் இப்படி வருணாசிரமதருமப்பிரசாரம் செய்து கொண்டு போவாரானால், நாம பலமான எதிர்பிரசாரம் ஆரம்பித்து அதைப் பற்றிய உண்மையையெல்லாம் வெளியிடுவது அவசியமாகும்.

## ஊத்தங்கரை தாலூகா விசேஷ இராஜீய மகாநாடு.

அநூரில் 1927 ம் வருஷம் செப்டம்பர் மாதம் 26 தேதி திங்கட்கிழமை ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, தென்னாட்டு திலகர் என்னும் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்.

அது சமயம் பல இராஜீய விஷயங்களை யோசித்தும் இத்தாலூகாவின் குறைகளை சீர்திருத்தம் செய்யவும் தீர்மானிக்கப்படும். ஆகையால் அன்பர்கள்யாவரும் விஜயஞ்செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். உபசாரணை கமிட்டியார்

அநூர் (சேலம் ஜில்லா)

## சோழவந்தான் தேசீய தர்மப்பள்ளி மூன்றாவது ஆண்டு நிறைவுவிழா.

நிகழும் பிரபவ ௵ புரட்டாசி ௴ 10௳ திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு மேடி விழா மதுரை நகரபரிபாலன சபைத்தலைவர் திருவாளர் ஆர். எஸ். நாயுடு அவர்களின் அவைத்தலைமையின் கீழ் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் தங்களிஷ்டர்களுடன் வந்திருந்து மேடி விழாவை இனிது நடாத்தி வைக்குமாறு வேண்டுகிறோம். காரியதரிசிகள்.

## ஸ்ரீமத் ஞானியார் ஆஸ்ரமம். பார்க்கவகுல இளைஞர்கட்கோர் விண்ணப்பம்.

அடியேனும, அன்பர் மாரண்டஹள்ளி மிட்டாதார் பார்க்கவ பந்தும் தெய்வீகன் ஆச்சிரமம் காணப்பெறல் வேண்டுமென்று பெருவிருப்பங்கொண்டிருந்ததையும், அதற்கு உறுதுணையாக உடனிருந்து உதவுமாறு நமது குலத்தனிப் பெருந்தலைவராகிய தென்னாற்காடு ஜில்லா திருக்கோவலூரைச் சார்ந்த மணம்பூண்டியில் வதியும் உயர் திரு. ம. ரா. குமாரசாமியார் அவர்களை வேண்டிக் கொண்டதையும் நமது குல முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள அன்பர்கள் அறிந்திருப்பர். நமது பெரியார் குமாரசுவாமியாரவர்களே முன்வந்து ஆச்சிரமம் நிறுவியிருத்தலைக் காண மகிழ்வெய்துகிறேன். இவ்வாச்சிரமத்திற்கு குலப்பற்றுடையார் ஒவ்வொருவரும் ஆங்காங்கு தத்தம்மால் இயன்றவரை முயன்று நிதி சேர்த்து உதவுதல் இன்றியமையாதது. வசூலித்த பணத்தை மணம்பூண்டி ஆச்சிரமத்திற்கே அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேன் தங்கள்

மே. வே. துரைசாமி

பொன்மலை, திருச்சி தாலூகா.

## "மகாத்மா காந்திமீது கண்டனம்."

திருச்சி ஜில்லா சுயமரியாதைச் சங்கத்தின் நிறைவேற்றக் கழகக் கூட்டமென்று 18—9—27 ஞாயிறு காலை 9-மணிக்கு மணிவாசகத் தமிழகத்தில் கூடியது. திருச்சி தாலூகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திருவாளர். தி. ச. அ. வேணுகோபால் நாயுடு அவர்கள் தலைமை வகித்தார்கள். கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

"மகாத்மா காந்தியவர்களின் கொள்கைகளாகிய தீண்டாமைவிலக்கு, விதவாவிவாகம் முதலியவைகளைப் பார்ப்பனர்கள் பகிரங்கமாய் எதிர்த்து வருவதை அறிந்தும்பழயபடியும் மகாத்மா பார்ப்பனர்களுக்கு அடங்கியும், அவர்கள் ஆட்டுவித்தபடியெல்லாம் ஆடியும் அதர்மக் கொள்கைகளாகிய வருணாச்சிரம தர்மக் கொள்கையை ஆதரித்தும், பார்ப்பனர்கைப்பொம்மையாயும், பார்ப்பனரல்லாதாரின் குறைகளில் ஊமையாயும் செவிடாயுமிருப்பதாக நினைக்கும்படியும் தமிழ் மக்களின் மனம் புண்படும் விதமாய் பார்ப்பனப் பிரசாரம் செய்துவருவதை இச்சங்கம் பலமாகக் கண்டிக்கிறது"

## பிராமணீயமொழிந்த திருமணம்.

ஆவணி ௴ 23௳. எங்கள் தம்பியாகிய தருமலிங்கம் செட்டிக்கும் எங்கள் மைத்துனர் சி. முத்துக்குமாரசாமி செட்டியார் அவர்களுக்கும் அவருடைய குமாரன் பெரியசாமி என்கிறவனுக்கும் செவ்வாய்பேட்டையில் எங்கள் கிருஹத்தில் பிராமணரை நீக்கி எங்கள் சிறியதாயார் குமாரர் இராமசுவாமி உபாத்தியாரைக்கொண்டு திருமணங்கள் விமரிசையாக நடத்தப்பட்டன. இன்னும் இதற்கு முயற்சியாக இருந்த ஸ்ரீமான்கள் கே. ராமலிங்கம் செட்டி, சந்திர சேகரஞ் செட்டி, வை. அருணகிரி செட்டி, கு. ரத்தினம் செட்டி, ப. சித்தஞ் செட்டி, மண்டி சி சிங்காரவேலு செட்டி, அ. நரசிம்ம பிள்ளை, மு. தருமலிங்கம் செட்டி, அடுத்த மாதம் நடத்தப்போகும் விவாஹங்கள் எல்லாம் இதேமாதிரி நடப்பதற்கு சந்தேகமில்லை என்று கோவை ஷாப்பு வியாபாரம் நடேசஞ் செட்டியார் எழுதுகிறார்.

## அநுதாபம்

மௌலானா ஷவுகத் அலி அவர்களின் இரண்டாவது குமாரர் ஜனாப் ஷஹீத் அலி அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று டில்லியில்! இறந்து போய் விட்டாரென்று கேள்விப்பட்டு மிகவும் விசனிக்கிறோம். சில நாட்களாக அவரது உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாயிருந்து வந்ததால் மௌலானா அவர்களும் தமது முக்கிய அலுவல்களையும் ஒத்தி வைத்து விட்டு படுக்கையண்டையிலேயிருந்து பாதுகாத்து வந்தும் கடைசியில் இவ்விளைஞரை தம்மிடம் வரவழைத்துக கொண்டது இறைவன் திருவுளமோ! அவர் ஆத்மா சாந்தியடைவதாக! அலி சகோதரர்களுக்கும் அவர் தம்குடும்பத்திற்கும் நம் விசனத்தையும அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# வருணாசிரமத்தைப்பற்றி

## மகாத்மாவின் குழப்பம்.

தஞ்சையில் மகாத்மா சில பார்ப்பனரல்லாத கனவான்களிடம் பேசியபிறகு, தான் பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் விஷயமான பூசலைப்பற்றி முன்னையைவிட அதிகமாகத் தெரிந்து கொண்டதாக ஒப்புக்கொண்டு அதற்குமேல் வருணாசிரமத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்:—

அவ்வாறு பேசியிருப்பது, தேசியப் பார்ப்பனரல்லாதார் என்போர் பார்ப்பனரை விடுவதற்கும் தைரியமில்லாமல், பார்ப்பனரல்லாதாரை விடுவதற்கும் தைரியமில்லாமல் இரண்டுபேரையும் ஏமாற்ற நினைத்துக் கொண்டு, அங்கொருகால் இங்கொருகாலாக வைத்துக்கொண்டு இருப்பதுபோல், மகாத்மாவின் பிரசங்கமும் இரண்டு பேரையும் ஏமாற்ற முயற்சிப்பதாகவே காணப்படுகிறது.

அதில் மகாத்மா குறிப்பிட்டிருப்பதாவது:—உயர்வு தாழ்வு என்பதே மனிதனுக்கு எந்த நிலையிலும் கிடையாது என்றும், அதிலும் பிறவியில் உயர்வு தாழ்வு சுத்தமாகக் கிடையாது என்றும் சொல்லி இருக்கிறார்.

பார்ப்பனர்கள் தங்களை உயர்வு தாழ்வு என்று சொல்லிக்கொள்ளுவார்களானால், அதை அழிக்கத் தானும் பார்ப்பனரல்லாதாருடன் சேர்ந்து கொள்ளுவேன் என்றும் சொல்லி இருக்கிறார். ஆனால் வருணாசிரமம் உண்டு என்றும், யார் முயற்சித்தாலும் அதை ஒழிக்க முடியாது என்றும், அது நமது வாழ்க்கைக்கு அவசியமானது என்றும், வருணாசிரமம் என்பது அடக்கம் என்றும் சொல்லியிருக்கிறார்.

பிறக்கிறபோது எல்லோரும் சமமாய்ப் பிறக்கிறார்கள் என்றும், ஆனால் பிறவியிலேயே தகப்பன் குணம் மக்களுக்கு வருகிறது என்பது மாத்திரம் உறுதி என்றும், இதை ஒப்புக்கொள்ளுவது வாழ்வை நடத்த அனுகூலமானது என்றும், ஆகவே இது தான் நான் சொல்லும் வருணாசிரம தர்மம் என்றும், நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கும் வருணாசிரம தர்மத்தை ஒழிக்க முயலுவதில், நான் சொல்லும் வருணாசிரமத்தையும் ஒழித்து விடாதீர்கள் என்றும், பார்ப்பனனின் உயர்வை ஒழிக்கவேண்டியது தான் என்றும், ஆனால் அவனுடைய கல்வி அறிவுக்கு மரியாதை செய்யவேண்டியது தான் என்றும், இதைச் செய்துதான்தீருவேன் என்றும் பேசியிருக்கின்றார்.

ஆகவே அவர் தஞ்சையில் பேசிய வருணாசிரம வியாக்கியனத்தில், இவைகளைப் பொருத்தவரை ஆராயலாம் என்பதாக எடுத்துக்கொண்டோம்.

இவைகளுக்குச் சமாதானம் எழுதுமுன் ஒரு விஷயத்தை முதலில் தெரிவித்துவிடுகிறோம். அதாவது மகாத்மா தம்மை இந்து என்று சொல்லிக்கொண்டு, இந்துமதம் ஆதாரம் என்பதான ஆரியர் கொள்கைகள் கொண்ட ஆதாரங்களையே தாம் பார்த்தும் கேட்டும் அனுபவத்தில் பழகியும் வந்ததோடு, தாமும் ஆரியர் ஆகிவிட்டார். அல்லாமலும் தமிழரின் பழக்க வழக்கம், தமிழரின் கொள்கை முதலியவைகளைக்கொண்ட ஆதாரங்கள் ஒன்றையும் பார்த்தோ, கேட்டோ, பழக்கத்தில் நடத்தியோ அனுபவமில்லாதவர். அதோடு ஆரியமே இந்தியா முழுதும் என்றும் அந்தக்கொள்கையே இந்தியா முழுதும் பொருந்தி இருக்கிறதென்றும் கருத்துக்கொண்டவர் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

இந்த நிலையில் நாம் சொல்லுவதென்னவென்றால், இந்துமதம் என்பதாக ஒரு மதமேயில்லை என்றும், ஆரியர் கொள்கை பழக்க வழக்க ஆதாரங்கள் நமக்கு கொஞ்சமும் பொருந்தியது அல்லவென்றும், நமது நாட்டுக்குக் கிருஸ்தவ மதம், மகமதிய மதம் முதலியவைகள் வந்ததுபோல் ஆரிய மதமும் ஒரு காலத்தில் புகுத்தப்பட்டதென்றும், கிருஸ்தவர்களும் மகமதியர்களும் தங்கள் மதத்தைப்பெருக்க நமது நாட்டில் அதைப் புகுத்தியதுபோல்கூட அல்லாமல் ஆரியர்கள் தங்களுடைய சொந்த வாழ்வை பெருக்கிக்கொள்ளும் சுய நல எண்ணத்தோடேயே, அதாவது ஐரோப்பியர்கள் இந்தியாவை ஆளுவது என்பது எப்படி இந்திய நன்மைக்கு என்று சொல்லுவதானாலும், ஐரோப்பியர் வாழ்வதற்கும் இந்தியாவை சுரண்டுவதற்காக பிரிட்டிஷ் வியாபாரம், ஆக்ஷியின் பேரால் நடைபெறுகிறதோ, அதுபோலவே ஆரியர்கள் வாழ்வதற்கு மதத்தின் பேரால் புரோகித வியாபாரம் என்பது நடைபெறுகிறது என்பதே நமது முடிவு. மகாத்மா மதத்தின் பேராலும் புராணங்களின் பேராலும் நமக்கு வருணாசிரமத்தை வியாக்கியானம் செய்வது எப்படி இருந்தாலும் அது ஆரியப்பிரசாரம் என்று தான் சொல்லுவோம்.

ஆனால் மகாத்மாவின் பிரசாரத்திற்கும் சங்கராசாரியார் செய்த பிரசங்கத்திற்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று பார்ப்பாமானால் அரசியலில் நடக்கும் பார்ப்பன பிரசாரத்தில் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்திக்கும் சீனிவாசசாஸ்திரிக்கும் உள்ள வித்தியாசங்கள் எவ்வளவோ அவ்வளவு தான். ஆகவே இரண்டு பேர்களின் பிரசாரமும் ஒரே கொள்கையைக் கொண்டதும் வியாக்கியானத்தில் சிறிது வித்தியாசமுடையது மாத்திரமல்லாமல் வேறல்ல.

இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்பதாகத் தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஆராய்ச்சிக்காரர்களும் ஒப்புக்கொண்டாய் விட்டது.

சாமி விவேகாநந்தர் போன்ற பெரியாராலும், நம் தமிழ்நாட்டு ஆராய்ச்சி வல்லவர்களான சுவாமி வேதாசலம் ஸ்ரீமான் கா. சுப்பிரமணிய பிள்ளை போன்றாகளாலும் இதே அபிப்பிராயங்கள் வெகு நாள்களுக்கு முன்னதாகவே தெரியப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் நமது நாட்டில் பார்ப்பனர்களுக்கே செல்வாக்கு பலவழிகளிலும் அதிகமாயிருப்பதால், இப்பேர்பட்ட அபிப்பிராயங்களைத் தமிழ் பத்திரிகைகள் வெளியிடப் பயப்படுகின்றன. இவ்வபிப்பிராயம் வெளியிடுபவர்களும் அடக்கி மிதித்துவிடப்படுகின்றார்கள். எனவே மக்களுக்கு இவ்வபிப்பிராயங்கள் மிகப் புதியதுபோல் காணப்படுகிறது.

ஆரியக் கொள்கைப்படியும் இந்துமதம் என்பதின் தத்துவப்படியும் தான் மகாத்மா நமக்கு வருணாசிரமத்தை போதிக்கிறாரே ஒழிய உலகப்பொது இயல்பின் படியாவது தமிழ் நாட்டின் நிலைமைப்படியாவது தமிழ் மக்களுக்கு நன்மை உண்டாகவாவது அவர் போதிக்கவில்லை என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இந்த விவகாரம் இப்படி இருந்தாலும், அவர் சொல்லுவதில் ஏதாவது ஒன்றுக்கொன்று பொருத்தமிருக்கிறதா என்பதைப் பார்ப்போம்.

குணத்திலாவது பிறவியிலாவது உயர்வு தாழ்வு இல்லை என்கிறார் ஒருபக்கத்தில். மற்றொரு பக்கத்தில் பிராமணனை அவனுடைய கல்விக்கு மரியாதை செய்துதான் தீருவேன் என்கிறார்.

வருணாசிரமம் பிறவியில் ஏற்படுவதில்லை, குணத்தில் ஏற்படுகிறது என்கிறார் ஒரு பக்கத்தில். குணம் பிறவியிலேயே ஏற்படுகிறது என்கிறார் மற்றொரு பக்கத்தில்.

பார்ப்பனர் உயர்வு என்பதை அழிக்க வேண்டும் என்கிறார் ஒரு பக்கத்தில். அவனுடைய அறிவையும் தியாகத்தையும் புகழ்ந்தாகவேண்டும் என்கிறார் மற்றொரு பக்கத்தில். வருணாசிரமத்தை யாரும் ஒழிக்க முடியாது என்கிறார் ஒரு பக்கத்தில். வருணாசிரமத்தை ஒழித்து விடாதீர்கள் என்கிறார் மற்றொரு பக்கத்தில். இது இப்படி இருக்க, இதன் தத்துவங்களைப் பற்றிச் சற்று கவனிப்போம்.

பார்ப்பனன் உயர்வு தாழ்வு கற்பித்தால் அதை ஒழிக்கத் தானும் பார்ப்பனரல்லாதாருடன் சேர்ந்து கொள்ளுவேன் என்கிறார். கோயில் பள்ளிக்கூடம் தெரு ஆகாரம் அருந்துமிடம் முதலியவைகளில் உள்ள பிரிவினைகள் எதைக்காட்டுகின்றன? இவைகளை ஒழிக்க மகாத்மா என்ன முயற்சி எடுத்தார்? குருகுல விவாதத்தின் போதே தமிழ்நாட்டின் நிலைமை தெரிந்திருக்கும். இதுவரை ஒரு வார்த்தையாவது அதைப் பற்றி நமக்குச் சொன்னாரா? முயற்சியாவது எடுத்தாரா? பிறவியில் குணம் வருகிறது என்கிறார் இதை ஒப்புக்கொள்ளுவதானால் மகாத்மாவின் மகனை மகாத்மா என்றுதானே சொல்லியாகவேண்டும்? மகாத்மாவின் மக்களில் ஒருவர் தப்புவழியில் நடப்பதாக மகாத்மாவே கூறியிருக்கிறார். அப்படியிருக்க எப்படி எல்லோரும் மகாத்மாவாகக்கூடும்? பிராமணன் அதிகப்படித்தவன், அறிவாளி தியாகி என்று ஒப்புக்கொண்டால், பிராமணன் மக்கள் எல்லாம் இந்த முறைப்படிக்கு அப்படித்தானே சொல்லியாகவேண்டும். பார்ப்பனரல்லாதாருக்கும் அவரவர்கள் தகப்பன் குணம் தானே இருக்கும். இந்த முறையில் தானே ஜாதி பிரித்திருக்கிறதாகப் பார்ப்பன சாஸ்திரிகளும் சொல்லுகிறார்கள். இப்படியிருக்கும் போது பார்ப்பனர் உயர்ந்தவர்கள் அல்ல என்று மகாத்மா எப்படி சொல்லக்கூடும்? நம்முடன் எப்படி சேர்ந்து அவ்வேற்றுமைகளை ஒழிக்க வேலை செய்யக்கூடும்?

## மஜ்லிஸுல் உலமா நான்காவது மகாநாடு

### கட்டடத் திறப்புவிழா.

திருச்சி, செப்டம்பர் 16-உ

சென்னை பிரபல வியாபாரியாக இருந்து காலஞ்சென்ற ஜனாப் ஜமால் மொகிதீன் சாகிபினால் கட்டிக்கொடுக்கப்பட்ட 'ஜமால் மொகிதீன் கட்டடத்தை' சென்னைக்கவர்ன்மெண்டின் ஹோம் மெம்பரான கனம் முஹம்மத் உஸ்மான் சாஹிபவர்கள் திறந்துவைத்தார். இதற்கு ஏராளமாகப் பொது ஜனங்களும் பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர்.

### ஜனாப் கலீபுல்லா சாஹிப்.

பிறகு மஜ்லிசுல் உலமாவின் சார்பாகவும் கட்டடத்திற்கு பணச்சகாயம் செய்தவரின் குமாரரான ஜனாப் ஹாஜி ஜமால் முகமது சாகிபின் சார்பாகவும் கட்டடத்தைத் திறந்துவைக்கும்படி கனம் முஹம்மத் உஸ்மான் சாகிபை கேட்டுக் கொள்ளுகையில் கான் பகதூர் பி. கலிபுல்லா சாகிப் செய்த பிரசங்கத்தின் சாரமாவது:— 1917-ம் வருஷம் மஜ்லிசுல் உலமா ஏற்பட்டது. தென்னிந்தியாவிலும் மலேயா முதலிய நாடுகளிலும் வசிக்கும் முஸ்லீம்களை எல்லாம் ஒருங்கு சேர்த்து சமூக, மத ஆசார விஷயங்களைப்பற்றி வாசிப்பதற்காவும் அவர்களின் முன்னேற்றத்திற்கான விஷயங்களை கவனிப்பதற்காகவும் இத்தகைய ஸ்தாபனம் ஒன்றிருக்கவேண்டுமென்ற எண்ணம் காலஞ்சென்ற ஜனாப் ஜமால் மொகிதீன் சாகிபின் மனதில் தான் முதன் முதலாக உதித்தது. அவர் அழகிய கட்டடத்திற்காக 60,000 ரூபாய் கொடுப்பதாக வாக்களித்ததுடன் மாதம் 500 ரூபாய் நன்கொடை கொடுப்பதாக சாஸ்வத நிதியும் ஏற்படுத்தினார்.

மதராஸயே ஜமாலியா என்ற அரபிக்கல்லூரிக்குக் காலஞ்சென்ற ஜமால் மொகிதீன் 7, 8 லட்சரூபாய் முதல் ஒதுக்கி வைத்திருக்கின்றார். அவரது வாழ் நாட்களில் ஏற்படுத்தப்பட்ட தர்மங்களை நீடித்து நடத்துவதற்காக மற்றும் 10 லட்ச ரூபாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. திருச்சிச் செம்பிறைச் சங்க ஆஸ்பத்திரிக் கூட்டத்திற்கு லட்ச ரூபாய் நன்கொடை கொடுத்த முஸ்லீம் அவர் ஒருவர் தான். தர்மஞ் செய்வதிலேயே அவர் தம் வாழ்நாள் முழுவதையும் கழித்த பெரியவர். இதனால் இக்கட்டடத்திற்குப் பணசகாயம் செய்தவருடைய பெயரையே வைப்பது தகுதியுடையதாகும். இக்கட்டடத்தை திறந்து வைத்து சங்கத்தையும் நம்மையும ஆசிர்வதிக்குமாறு கனம் முஹம்மத் உஸ்மான சாகிபவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### கனம் முஹம்மது உஸ்மான் சாகிப்

கனம் கான்பகதூர் முஹம்மது உஸ்மான் சாகிப் கட்டடத்தை திறந்து வைக்கையில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்:—

இக் கட்டடத்திற்கு தர்மத்திற்காகவும் தயாளத் தன்மைக்காவும் பெயர் பெற்ற ஜமால் மொகிதீன் பெயரை வைப்பது மிக்க பொருத்த முடையதாகும். முஸ்லீம் லௌகிகக் கல்வி விஷயத்தில் அவர்களுக்குமுன்பு இருந்த ஸ்திதியிலேயே முஸ்லிம்கள் இருப்பதாக 3, 4 வருடங்களுக்கு முன்பு நான் சென்னையில் செய்த பிரசங்கத்தில் புள்ளி விவரங்களுடன் காட்டினேன். மதக் கல்வியுடன் லௌகிகக் கல்வியும் கலந்து போதிக்கப்படாவிட்டால் முன்னேற்றமே ஏற்படாதென்று ஜனாப் ஜமால் முகமது உணர்ந்து முஸ்லிம மௌல்விகளது கூட்டுறவைப்பெற மஜ்லிசுல் உலமாவை ஏற்படுத்தினார். 70 மாணவர்கள் அனாதை ஆச்சிரமத்தில் தங்கியிருக்கின்றனர். இந்த ஸ்தாபனம மென்மேலும் விருத்தியடைய் இந்நாட்டிலுள்ள எல்லா சமூகத்தாருடைய கூட்டுறவும் நட்பும் இருக்கும்படியான முறையில், நடத்தச் சிறந்த சந்தர்ப்பத்தை மௌல்விகளாகிய நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

---

வருணாசிரமம் என்பது அடக்கம் என்கிறார். இது எந்த அகராதியில் இருக்கிறது என்பது நமக்கு விளங்கவில்லை. அப்படியானால் மகாத்மா எந்த நிலையில் வருணாசிரமத்தை அனுபவிக்கிறார்? அவர் வாழ்விற்கு அவருடைய வருணாசிரமம் என்ன உதவி செய்கிறது? அந்த வருணாசிரமத்தை ஒப்புக் கொள்ளாதவனுக்கு என்ன கெடுதி செய்கிறது என்பவைகளை எல்லாம் யோசித்துப் பார்த்தால் மகாத்மா சொல்லுவதில் ஏதாவது உண்மை இருப்பதாக நினைக்க முடியுமா? அப்படியில்லாமல் இரண்டு பேரையும் கண்டிப்பது போலவும், இரண்டு பேரையும் திருப்தி செய்வது போல்வும், வழ வழ கொழ கொழ என்று பேசுவது என்ன பிரயோஜனத்தைக் கொடுக்கும் என்பது நமக்கு விளங்கவில்லை. எனவே நாம் ஒரு விஷயம் மாத்திரம் அதிலிருந்து எடுத்துக் கொள்ளுவோம். அதாவது மகாத்மா இப்போது அனுஷ்டானத்தில் உள்ள வருணாசிரம தர்மம் அக்கிரமமானது, அதை அழிக்க வேண்டியது என்று சொல்லி விட்டார். இந்த அளவுக்கு நாம் ஒரு விதத்தில் திருப்தி அடைகிறோம். ஆகவே இதை அழிக்க நாம் முற்படவேண்டியதுதான. இந்த வருணாசிரமம் இப்போது நமது நாட்டில் பார்ப்பது, கேட்பது, படிப்பது, நடப்பது, சாப்பிடுவது, சுவாமி கும்பிடுவது, கிட்ட வருவது, தெருவில் நடப்பது முதலிய காரியங்களில்தான் இருக்கிறது. இதைத்தான் சாஸ்திரிமார்களும் ஆச்சாரிமார்களும் வேதம சாஸ்திரம் சுருதி ஸ்மிருதி புராணம் முதலியவைகளில் இருப்பதாகச் சொல்லி அமுலில் வைத்திருக்கிறார்கள்.

ஆதலால் இதை ஒழிக்கிற வேலையில் நாம் எல்லோரும் வேலைசெய்ய வேண்டியதே தவிர, வேறு விவகாரம் வேண்டியதில்லை. மற்றபடி மகாத்மா சொல்லும் வியாக்கியானங்களைப்பற்றி நாம் காது கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை. பின்னால் ஏதோ விரிவாய் தெரியப்படுத்துவதாக மகாத்மா சொல்லியிருக்கிறபடிக்கு அதை எதிர் பார்க்கிறோம் ——— "திராவிடன்"

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

னிக்கவேண்டும். குடும்பம் இன்னும் பிரிக்கப்படவில்லை யாதலாலும் அதுகளால் இன்னமும் ஒரு சம்பாதனையும் இல்லை யாதலாலும் ஒரே குடும்பமாய் பாவித்து விட்டேன்.

குரு:— நீ குடும்பம் பிரித்தால் என்ன பிரிக்காவிட்டால் என்ன. அவர்கள் சம்பாதித்தால் என்ன சம்பாதிக்கா விட்டால்என்ன, பெரிய சுவாமிகள் காலத்திலேயே உன் பெரியோர்களால் தலைக்கட்டுக்கு ஒன்றே கால் ரூபாய் கொடுப்பதாக பட்டயமிருக்கிறது. அல்லாமலும் சாஸ்திரத்திலும் தலைக்கட்டுக்கு தனித்தனியாய் வாங்கும்படி ரிஷிகள் சொல்லி இருக்கிறார்கள். அந்தப்படி கொடுக்க வேண்டும் என்றும் தர்ம சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

சிஷ்யன்:— சுவாமி! நாயேன் தெரியாத்தனத்தினால் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். முன்றே முக்கால் ரூபா காணிக்கையும் இந்த அபசாரத்திற்காக அபராதம் ஒன்றேகால் ரூபாயும் சேர்த்து ஐந்து ரூபாயாக வைத்திருக்கிறேன். பெரியமனது செய்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

குரு:— நிரம்பதிருப்தி. மடம் ரம்பவும பழுதாயிருக்கிறது சிஷ்யர்கள் எல்லாம் ஒரு நாளைக்கு வந்து பார்த்து அது எப்படி செய்யவேண்டுமோ அந்தப்படி செய்யுங்கள் (தன்னைத்தானே) சுவாமிகள் ரம்பவும் அதனால் அசவுக்கியப்படுகிறார்கள்.

சிஷயன்:— ஆ ஆகா இதோ 10 நாளில் நாங்கள் எல்லோரும் மடத்திற்கு வந்து ரிபேர் செய்து விட்டுவருகிறோம்.

இவ்வளவு தான் குருவுக்கும் சிஷயர்களுக்கும் சம்பாஷணை, இதைத் தவிர வேறு ஏதாவது நடந்ததை நான் பார்த்ததே இல்லை.

இப்படி இருந்தால் இது ஒருபகற்கொள்ளையா அல்லவா என்று தான் கேட்கிறோம். இம்மாதிரி குருவை யுடைய நாடாவது மக்களாவது சுயமரியாதை அறிவு விடுதலை முதலியவைகள் அடைய முடியுமா? எனவே ஒரு கூட்டத்தார் அதாவது பார்ப்பனர்கள் பிழைக்கவே அரசியல், கடவுள், மதம், ஆச்சாரியர்கள் ஆகியவைகள் இருக்கின்றனவே அன்றி இவைகளால் ஏதாவது பலன் உண்டாகிறதா?

இம்மாதிரியான ஏமாற்றத்தில் இருந்து விலகி அன்பு என்கிற உண்மையான கடவுளை அடைய சமத்துவம் என்கிற கொள்கைகளான மதத்தையும் சுயமரியாதை என்கிற குருவையும் அடைந்தால்தான் விடுதலையோ இன்பமோ மோட்சமோ அடைய முடியுமே யல்லாமல் வேறு ஒன்றினாலும் முடியாது என்பதை உணருங்கள்.

---

### வந்தனோபசாரம்.

கான்பகதூர் பி. கலிபுல்லா சாகிப் வந்தனோபசாரம் கூறுகையில் தென்னிந்தியாவில் முஸ்லிம்களும் ஹிந்துக்களும சகோதரர்கள் போல் வாழ்ந்து வருகிறார்களென்றும திரிச்சிராபள்ளியில் ஹிந்து முஸ்லிம்களுக்குள் எத்தகைய சச்சரவும் கிடையாதென்றும் சொன்னார்.

# மஜ்லிசுல் உலமா 4-வது மகாநாடு.

## தலைவர் பிரசங்கம்.

திருச்சியில் சென்ற 17, 18 தேதி கூடிய 4-வது மஜ்லிசுல் உலமா மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீ. செய்யது சுலைமான் சாகிப் நத்வி செய்த பிரசங்க சுருக்கமாவது:—

## இஸ்லாமும் மஃபர் பிரதேசமும் மலபாரும்.

உங்களுடைய சென்னைமா நகரம் புதிய நகரமாக இருந்தாலும், உங்களுடைய மாகாணத்திற்கு இது புதிய பெயராக இருந்தாலுங்கூட இது பூர்வீகமாகவே இஸ்லாத்தில் சம்பந்தமானதாக இருந்து வருகிறது. அரபிவர்த்தகர்களும், சஞ்சாரிகளும் இத்தேசத்தைப் பூர்வீககாலந்தொடுத்து அறிந்திருந்தார்கள். உங்களுடைய கடற்கரைப் பிரதேசத்தை "மலபார்" என்றும் உள்நாட்டுப் பிரதேசத்தை "மஃபர்" என்றும் அவர்களின் அரபிப் பாஷையிற் பெயர் வைத்திருக்கிறார்கள். "மஃபர்" என்ற அரபிப்பதத்திற்கு சமுத்திரத்திற்கு அப்பாலுள்ள உள்நாடு என்று சொல்லப்படுகிறது. அரபிகள் சமுத்திரத்தைக் கடந்து உள்நாடுகளில் சென்றிருந்தார்களாதலால் அதற்கு "மஃபர்" என அவர்கள் நாமஞ் சூட்டியிருக்கலாம். இந்தியாவிலுள்ள ஏனைய மாகாணங்களைக் காட்டிலும் சென்னை மாகாணத்திற்கு இஸ்லாமிய சம்பந்தத்தைப் பொறுத்தவரையில் விசேஷ மதிப்பிருக்கிறது. நம்முடைய "மாப்பிள்ளைச்" சகோதரர்களும் "நவாயித்து" சகோதரர்களும், அரபுக்கும் சென்னை மாகாணத்திற்கும் பல நூற்றாண்டுகளாக உள்ள சம்பந்தத்திற்கு ஞாபகார்த்தமாக இருக்கிறார்கள்.

கனவான்களே! இஸ்லாம் மதமானது வாள் பலத்தினால் மாத்திரம் பரவிற்றெனக் கருதும் குருட்டு நம்பிக்கைக்காரர்களுக்கு மறுமொழியாக இருப்பதற்காக இப்பிரதேசத்தில் இஸ்லாம் மதம் ஏழரை நூற்றாண்டுகள் வரை அமைதியாகவும், சமாதானமாகவும் விருத்தியானதைப் பற்றிக்கவனித்தல் அவசியமாகும். இத்தேசத்தின் பழைய சரித்திரம் எதுவுமில்லாதது வருந்தத்தக்கது. ஹிஜ்ரி 11-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பெற்ற "துஹ்பத்துல் முஜாஹிதீன்" எனும் ஒரு சரித்திரப் புத்தகம் மாத்திரம் இருக்கிறது. இதைத்தவிர, இது சம்பந்தமான ஆதாரங்களை அதிகமாகத் தேடிப் பார்த்ததில் அரபி சஞ்சாரிகளின் பிரயாணக்குறிப்புப் புத்தகங்களிலிருந்துஞ் சில விபரங்கள் கிடைத்திருக்கின்றன. அவைகள் மேற்கண்ட "துஹ்பத்துல் முஜாஹிதீன்" என்னும் நூலை ஆதரிக்கின்றன.

சென்னை மாகாணத்தில் முஸ்லிம் அரசாங்கத்தின் சிப்பாய் ஒருவன் கூடவராமலிருந்த காலத்திலுங்கூட எல்லா இடங்களிலும் இஸ்லாமிய குடிகள் இருந்திருக்கின்றனர், மஸ்ஜிதுகள் இருந்தன. அரசராக இருந்திருக்கின்றனர். துறை முகங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தனர். அவைகள் மேனாட்டுக்கும் கீழ் நாட்டுக்கும் மிடையில் வியாபார மண்டிகளாக இருந்தன. இவர்களின் நன்னடத்தை, உண்மை ஆகியவைகள் ஹிந்து பொதுஜனங்களை மாத்திரமல்லாது இராஜாக்களையுங்கூட இஸ்லாம் மதத்தைத் தழுவும்படி செய்தன.

## ஸ்ரீநகா மடமும் திப்பு சுல்தானும்.

இது சம்பந்தமாக நாம் கூறுவதற்குப்பதிலாகச் சென்னை சங்கராச்சாரியாருக்கு ஸ்ரீநகர மடத்திலிருந்து சில வருஷங்களுக்கு முன்னால் கிடைத்த சில கடிதங்களைக் குறிப்பிடுகிறேன். அவைகள் சுல்தான் ஷஹீது (திப்பு) அவர்கள் இவ்விடத்திய குருக்களுடன் மிகவும் நல்ல விதமான சம்பந்தம் வைத்திருந்தார் என்பதற்கு ஆதாரம் கிடைத்திருக்கிறது. மராட்டியர்கள் இடித்துத் தள்ளிய ஹிந்து மடத்தை மறுபடியும் புதிதாகக் கட்டுவிக்கும்படிக்கு "விக்கிரகங்களை உடைக்கிற முஸ்லிம் சுல்தான்" தன்னுடைய உத்தியோகஸ்தர்களுக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறார். இக் கடிதங்களைப்பற்றி அம் மடத்திலிருக்கிற தற்கால ஜகத்குரு பல தடவைகளிலும் பிரஸ்தாபித்திருக்கிறார். அவைகளின் மூலமாக ஹிந்து, முஸ்லிம் சம்பந்தத்தைச் சீர்திருத்த முயற்சி செய்திருக்கிறார்.

## இஸ்லாமிய ஒற்றுமை.

ஐரோப்பாவின் நாடு பிடிக்கும் ஆசைக்கு விரோதமாக இஸ்லாமிய ஒற்றுமையைக் கண்டுகொண்டிருந்தவரும் அதற்காக கிரியாம்சையில் முயற்சி செய்தவரும் "சுல்தான் ஷஹீது" (திப்பு) றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தான் இந்தியாவில் முதல் மனிதர். அவர் பற்பல சுல்தான்களுக்கு இது விஷயமாக எழுதிய பல கடிதங்கள் சரித்திரத்தின் புத்தகங்களுள் காணலாம். 'தர்யாபாக்' அரசாங்கத்தின் (ஸ்ரீரங்க பட்டணத்தின்) கோட்டைச் சுவற்றில் சில அரபிவாக்கியங்கள் இன்றுமிருக்கின்றன.

இந்தியாவின் இஸ்லாமானது இஸ்லாமிய உலகத்தின் ஓர் நதியாக இருக்கிறது. இந்நதியானது தன்னுடைய உற்பத்தி ஸ்தானத்தை விட்டுப் பிரிந்து தன்னுடைய அழிவுக்குத தகுந்த சாமானைச் செய்யும் நாள் வாராமல் இறைவன் காப்பாற்றவேண்டும். முஸ்லிம் ஜனத்தொகை தன்னுடைய சகோதர தேசத்தினர்களைப்பார்க்கிலும் குறைவாக இருக்குந் தேசத்தியமுஸ்லிம்கள் தங்களுடைய இஸ்லாமிய மதத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக வேறு இஸ்லாமிய "கான்தாலக"ளுடன் தங்களுடைய சம்பந்தத்தைப் பலப்படுத்திக்கொள்வது கடமையாகும். இவ்வாறு செய்வது ராஜீய விஷயங்களுக்காகவல்ல, மேலும், தங்களுடைய மதம், தங்களுடைய நாகரிகம், தங்களுடைய இஸ்லாமியத்துவம் ஆகியவற்றைக் காப்பாற்றிக் கொள்வதற்கேயாகும்.

## இந்திய முஸ்லிம்களின் புனருத்தாரணம்.

ஆனால் கனவான்களே! நம்மை நாமாகவே சீர்திருத்திக் கொள்ளவேண்டியது மிகவும் அவசியமானது. சென்ற காலத்தில் நமக்குள் ஏற்பட்ட புனருத்தாரணச் சீர்திருத்தமானது வேறொரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது. அதில் ஸ்திரமும் உறுதியும் இருக்கவில்லை. அது தூக்கம் கோபம் உணர்ச்சி ஆவேசம் முதலியவைகளின் பலனாக ஏற்பட்டது. ஆனால், இப்பொழுது அமைதி, சாந்தம், பொறுமை, உறுதி, தன்னம்பிக்கை முதலியவைகளின் மீது ஸ்தாபிக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. முஸ்லிம்களை வீண் செலவு செய்வதிலிருந்து தடுக்கவேண்டும். மிதமான செலவு செய்யும் படி போதிக்கவேண்டும். விவாகம் துக்கம் முதலிய காலத்திய சடங்குகளில் சீர்திருத்தம் செய்யவேண்டும்.

## ஆரம்பக் கல்வியின் அவசியம்.

முஸ்லிம் ஆரம்பக் கல்வியை விருத்தி செய்து பரப்புவதுஎன்ற ஒரே காரியத்தில் இஸ்லாம்மதப்பாதுகாவல், இஸ்லாம மதக் கல்வி அபிவிருத்தி, ராஜீயம் சீர்திருத்தம் பொருளாதாரம் ஆகியவைகள் எல்லாம் அடங்கி இருக்கின்றனவென்பது என்னுடைய அபிப்பிராயம்.

தீர்மானங்கள் வருமாறு:—

(1) மதக் கல்வியையும் உலக வாழ்க்கைக்கான கல்வியையும் பிரித்து வைப்பது இயற்கைக்கு விரோதமாயிருப்பது மன்றி இஸ்லாத்தின் கொள்கைகளுக்கு மாறானதாகும். அதனால் முஸ்லிம் சமூகத்திற்கு கெடுதியுண்டாயிருக்கிறது.

ஆகையால் பொதுப் பள்ளிக்கூடங்களிலும் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களிலும் முஸ்லிம் மாணவருக்கு மதக்கல்வி போதிக்க ஏற்பாடுசெய்ய இந்த மகாநாடு அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) தென்னிந்தியாவிலுள்ள அரபிப் பாடசாலைகளில் போதிக்கப்படும் கல்வி சரியானதல்லவாகையால் இந்தப்பள்ளிக்கூடங்களில் படிக்கிற மாணவர் மதவிஷயமானதும் உலக வாழ்க்கைக்கு அவசியமானதுமான பூரண அறிவு பெற்றவர்களாகும் படி தக்க கல்வி முறை ஏற்படுத்த வேண்டுமென்று மகாநாடு எல்லா அரபிப் பள்ளிக்கூடத்தலைவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறது.

(3) பொதுப் பள்ளிக்கூடங்களிலும் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களிலும் உருது பாஷை படித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும், தென் இந்தியமுஸ்லிம்கள் உருது பாஷையை தங்கள் தாய்மொழியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்,

(4) புதுக்கோட்டை முஸ்லிம்கள் இந்துக் கோவில் தேர்களை இழுக்கிற வேலைக்குப் பதிலாக முஸ்லிம் பட்டாதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற வேலை வரியை நீக்க புதுக்கோட்டை சமஸ்தான அதிகாரிகள் உடனே ஏற்பாடு செய்ய வேண்டும்.

(5) சில முஸ்லிமல்லாதாரின் அனுசார நடத்தையைக் கண்டு முஸ்லிம்கள் ஆத்திரபடுவது இஸ்லாம மத கொள்கைகளுக்கு ஏற்றதல்ல. ஆகையால் முஸ்லிம்கள் சமாதானமாகவும நியாயமான வழிகளிலும் மாத்திரம் இஸ்லாம் மதப் பிரசாரம் செய்ய வேண்டுமென்று இந்த மகாநாடு கேட்கிறது.

(6) சென்னை மாகாணத்திலுள்ள எல்லா முஸ்லிம் டிரெய்னிங் சாலைகளிலும்மதக் கல்வி போதிக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(7) முஸ்லிம் காஜிகள் நியமிக்கிறதற்காக ஒரு மசோதா தயாரிப்பதற்கு உலமாக்கள், முஸ்லிம் தலைவர்கள் முதலியோரைக்கொண்ட ஒரு கமிட்டியை சர்க்கார் ஏற்படுத்த வேண்டும்.

(8) மாகாண வக்பு சொத்துக்கள் சரிவர நிர்வகிக்கப்பட்டு பரிபாலனஞ் செய்யப்பட வேண்டியதை முன்னிட்டு விஷயத்தை ஆலோசனை செய்து கவர்ன்மெண்டாருக்கு அபிப்பிராயம் தெரிவிக்க ஒரு கமிட்டியை நியமிக்கும்படி இம்மகாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(9) திரிச்சிராப்பள்ளி இஸ்லாமியா பள்ளிக்கூட கட்டடம் கட்டுவதற்கு கவர்ன்மெண்டார் செய்திருக்கும் தீர்ப்பை உடனே அமுலுக்குக் கொண்டு வந்து கட்டிடத்தை சிக்கிரம் கட்டி முடிக்கும்படியாக இம்மகாநாடு கவர்ன்மெண்டாரைக்கேட்டுக் கொள்ளுகின்றது.

காலஞ்சென்ற ஜனாப் ஜமால் முகைய தின் ராவுத்தர் மௌலவி மதார் சாஹிப் முதலானோர்களைப் பற்றி அனுதாபத் தீர்மானம்.

ஹாஜிகள் ஜித்தா செல்ல பம்பாய் காரச்சி துறை முகங்கள் சென்று கஷ்டப் படவேண்டிருப்பதால் ஹஜ் பிரயாணிகளை ஏற்றிச் செல்ல சென்னை துறை முகத்தையும் திறந்து வைக்கும்படியாக இம்மகாநாடு சென்னை மாகாண கவர்ன்மெண்டாரையும் இந்தியா கவர்ன்மெண்டாரையும் கேட்டுக் கொள்ளுகிறது.

மார்க்கக் கல்வியையும், உலகக் கல்வியையும் ஒருங்கே போதிக்கும் பள்ளிக்கூடத்தையும் கலாசாலையையும மஜ்லிசுல் ஸ்தாபிப்பதற்கு ஹேதுவாகும படியும் மஜ்லிசுல் உலமா கட்டடத்தில் ஒரு மஸ்ஜித் கட்டுவதற்கும் மஜ்லிசின் இதர நோக்கங்களை நிறைவேற்றி வைக்கவும் சாத்தியமாகும்படி ஏராளமான மண உதவி செய்யும் படியாக இம் மகாநாடு முஸ்லிம்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகின்றது.

முஸ்லிம் பெண்கள் கோஷா முறைப்படி பள்ளிக்கூடத்திறகுச் செல்வதற்கு வண்டிகளுக்கு ஏற்பாடு எல்லா இடங்களுக்கும் செய்து கொடுக்கும் படியாக கவர்ன்மெண்டாரையும ஜில்லாபோர்டு முனிசிபல் சபை முதலிய ஸ்தல ஸ்தாபனங்களையும்இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது.

ரங்கிலா ரசூல்போன்ற நிந்தனை நிறைந்ததும் அற்பத்தனமும் கேவலமுமான நூல்களனைத்தையும் இம மகாநா பலமாகக் கண்டிப்பதுடன் அவ்வித நூல்கள் வழி கெட்ட சில தனி நபர்களின சுபாவத்தைக் காட்டுகிறதென்றும் அவ்விதக கேவல செய்கைகள் நாட்டிற்குக் கெடுதி செய்வதன்றி எவ்வித நன்மையையும் உண்டாக்கக் கூடியதல்லவென்றும் அத்தகைய கேவலப் பிரசுரங்களுக்கு நாட்டிலுள்ள எவ்வகுப்பினரும ஆதரவளிக்கக்கூடாதென்றும இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது

அக்கிராசனர் முடிவுரைக்குபபின் மகாநாடு கலைந்தது.

---

## திருப்பூர் அங்கப்ப செட்டியார் இலவச வாசகசாலை

இவ்வூரில் மெத்தை வீட்டு செட்டியார் என்று அழைக்கப்படும் பிரபல தனவந்தர்களும், பல தர்ம ஸ்தாபனங்களை ஏற்படுத்தியவர்களுமான திருவாளர்கள் க. சுப்பிரமணிய செட்டியார், தி. அ. ராமலிங்கம் செட்டியார், தி. அ. சோமசுந்திரம் செட்டியார், T. S. சிவசுப்பிரமணிய செட்டியார், க. சு. கந்தசாமி செட்டியார், க. சு. திருஞானசம்பந்தம் செட்டியார், க. சு. அதிகாசிலிங்கம் செட்டியார் இவர்களின் தர்மத்தால் நடைபெற்று வரும் திருப்பூர் சத்திரத்தின் மேல் மாடியில் சென்ற ஆவணி மாதம் 6 தேதி யன்று அவர்கள் வமச பெரியாராகிய காலஞ்சென்ற உயர் திருவாளர் "சு. அங்கப்ப செட்டியார் இலவச வாசக சாலை" என்று திருப்பூரில் திருவாளர்கள் க. சு. கந்தசாமி செட்டியார், க. சு. கந்தசாமி செட்டியார் பி. ஏ. பி. எல் ஐகோர்ட்டு வக்கீல் இவர்களின் முயர்ச்சியால் திறந்து வைக்கப்பெற்று செவ்வனே நடைபெற்று வருகிறது. ஷை வாசகசாலையில் தமிழ் ஆங்கில புத்தகங்கள் ஏராளமாக வைக்கப்பட்டிருக்கிறது. தினசரி பத்திரிகைகளாகிய 'இந்து' 'சுதேசமித்திரன்' 'தமிழ் நாடு' 'திராவிடன்' இவைகளும் வாரப் பத்திரிகைகளாகிய 'குடி அரசு' 'நவசக்தி' இவைகளும் இதைத் தவிர மாதாந்தப் பத்திரிகைகள் சிலதும் வரவழைக்கப் படுகிறது. காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும். மாலை 4 மணி முதல் 8மணி வரையிலும் வேண்டிய புத்தகங்களும் பத்திரிகைகளும் வாசித்துக்கொள்ளலாம். வாசக சாலை கட்டடம் நகருக்கு மத்தியில் விலாசமாக இருக்கிறது. பிரதி ஞாயிற்றுக் கிழமைகளிலும் மாலை 6-30 முதல் 8 மணி வரை பல அறிஞர்களால் உபந்நியாசங்கள் நடை பெற்று வருகிறது. திருப்பூர் முனிசிபல் பள்ளிக்கூட மாணவர்களுக்கு ஷை வாசகசாலையில் அநேக சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. கைராட்டினங்களும் பஞ்சும் வைத்து நூலும் நூற்கப் படுகிறது. தேசப் பயிற்சியும் செய்விக்கப் பட்டுவருகிறது. 11-9-27 ஞாயிற்றுக் கிழமை ராவ் சாகிபு விட்டல் தாஸ் ஆனன் ஜீ சேட் அவர்கள் தலைமையில் உள்ளூர் பிரபல பஞ்சுவர்த்தகர் திருவாளர் கே. எஸ். இராமசாமிக் கவுண்டர் அவர்கள் "சர்வமத சமதுவம்" என்னும் விஷயமாய் அரிய சொற்பொழிவு ஒன்று நடத்தினர். இதை யொட்டி திருவாளர்கள் நம்மயபகரு, குப்புமீரா ராவுத்தர் பேசிமுடிந்ததும் அக்கிராசனர் முடிவுரையுடனும் திருவாளர் சிவ விலாஸ் பி. எம். ஆர். மாணிக்க சிவா அவர்களால் மனதுருகும் படியாக கடவுள் வணக்கத்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

இவ்வாசகசாலைக்கு பெரிய தனவந்தவரும் ஷை செட்டியார் குடும்பத்தைச் சேர்ந்தவருமான திருவாளர் கே. எஸ். கந்தசாமி செட்டியார் அவர்கள் காயதரிசியாக

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுவது பாத்திரமென்றல்லவா ஸ்மிருதியில் எழுதியிருக்கிறது. பாவத்திற்குப் போகிறவனைப்போகாமல் தடுக்கும் பிராமணன் யார்? சாஸ்திரத்தில் அவனைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது? சற்பாத்திரமல்லாத தானம்பணத்தோடுஒழிவது மட்டுமல்லவே. வாங்கினவனையும் கெடுத்துக்கொடுத்தவனும் நரகத்திற்குப் போகிறானென்று அல்லவா ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. "எந்த இழிவுத்தொழிலைச் செய்து மையினர்கள் கூட நடக்கும் பாப்பானுக இருந்தாலும் நாம் கொடுக்கவேண்டியதைக்கொடுத்துவிடுவது தானே. அவன் பாவம் அவனோடு" என்பது சாஸ்திரத்திற்கு சம்மந்தமல்லவே. பூஸ்திதியில்லாதவனுக்குக் கடன் கொடுத்தால் புஸ்தகக்கணக்குக்கு ஒத்துவருமே ஒழியகையிருப்புக்குறையாதிராது. உத்தமமான பிராமணன் யார்? வேதம் வாசித்து படித்த வேதத்தின் உண்மைப் பொருளுணர்ந்து தவசு செய்து தவசில் பலனடைந்து ஒழுக்கமடைந்து அந்த ஒழுக்கத்தை உலகத்திற்கு உரைக்க உலக ஆசைகளை விட்டு தனக்சென்று ஒரு பொருளுமில்லாதவனும் சத்தியமும் தானமும் துரோகமின்மையும் குரூரமின்மையும், பொறுமையும்,தயையும், மேற்கொண்டு விளங்குகின்றவன் பிராமணன். இப்பேர்ப்பட்டவுத்தம பிராமணனுக்குத் தானம் கொடுப்பதை விட தன்னுடைய உடன் பிறந்தவர், சுற்றத்தார், பெண்கள் இவர்கட்கு கொடுப்பது கோடிபங்கு புண்ணியமென்று பிராமணனுக்குத்தானம் கொடுத்தால் புண்ணியமென்று எந்த பராசஸ்மிருதியிலிருந்ததோ அதிலேயே சொல்லியிருக்கிறது. நீங்கள் படித்தால் நரகத்திற்குப்போய் விடுவீர்களென்றும் சாஸ்திரத்திலிருப்பதால் நீங்கள் படிக்கவில்லை. நீங்கள் கேட்டால் நாசமாய்விடுவீர்கள் என்று சாஸ்திரத்திலிருக்கிறபடியால் உங்களுக்குச் சொல்லப்படவில்லை. மிருகத்திலிருந்து மனிதன் வேறாகும் சிந்தனை சக்தியை நாம் உபயோகிக்கத்திறமையற்றவர்களாய்ப் போனதினால் நம் பணத்தை ஏமாற்றி வாங்கி அதனால் உயர்வடைந்து நம் அறிவைப்பற்றியும் ஏமாளித்தனத்தைப்பற்றியும் பின்னால் பரிகாசம் செய்கிறான். முன்னால் பயமும் வணக்கமும் காரியசித்திக்கு நமக்கு அனுகூலமான பெரும் மதில் போலவும் தோன்றுகிறான் உங்கள் நல்ல எண்ணமும் காரியசித்தியும் உங்கள் முயற்சியால் ஆசீர்வதிக்கப்படட்டும்.

---

அநேக காகூழிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

**விதைகள், செடிகள்.**

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ளது. செடி 1-க்கு அணு 8 முதல் அணு 12. ரோஸ் குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி கேட்லாக் இனம். இங்கிலீஷ் காய்கரி, புஷ்ப விதைகள்.

| | |
|---|---|
| 20-சாம்பிள் பாக்கெட் | ரூ. 2—0—0 |
| 10 ,, ,, | ரூ. 1—4—0 |
| நாட்டு காய்கரி 20 | ரூ. 2—8—0 |

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்நர்சரி தோட்டம், சேலம்.

---

இருந்து கொண்டு எல்லா செலவுகளுக்கும் தங்கள் சொந்தச்செலவிலேயே கொடுத்துக்கொண்டு மிக ஊக்கத்துடன் இப்பொதுப் பணியிலீடுபட்டு வருவது மிகவும் பாராட்டத்தக்கது என்று திருவாளர் கே. வி. வெங்கிடாசலபதி அவர்கள் எழுதுகிறார்.

## மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சித்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குளொப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.

குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்த்ரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது. எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும். கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்





நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

### பழனி. சி. எம். சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகைகளாலேயே நீற்றப்பட்டது. பெரிய யஹானின் முறை அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

### குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30

நற்சாட்சி —நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு, ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன் கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

### குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா 16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்பு இவைகள் குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம

### சித்த ஆயுர்வேத வைத்திய ஆசிரியர்

**C. மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை



## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும், எட்டுப் பக்கங்களடங்கிய

### "குடி நூல்"

என்ற கதர்ப் பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லா விவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.



## உறையூர் அங்கவஸ்திரங்கள்.

அசல் 100 நெ. நூலில் தயார் செய்யப் பெற்றது. பலராலும் நன்கு மதிக்கப் பட்டது. தினப்படி உபயோகத்திற்கு "கற்ற" கம்பி சதா அங்கவஸ்திரங்களை உத்தியோகஸ்தர் முதல் ஏழைவரை சாதாரணமாக உபயோகிக்கலாம்.

2¾ அகலம் 5 முழம் 1க்கு ரூ 1—12—0

ஷை சரிகை சேர் 1க்கு ரூ 1—14—0

தபால் செலவு வி. பி. வேறு

மற்றும் ஜவுளி வியாபாரிகளுக்கு வேண்டிய சரிகை போட்ட 200 நெ துப்பட்டாக்கள் முதலியனவும் கிடைக்கும். கமிஷனுக்கு சகாயமாக ஆடர்படி வாங்கி அனுப்பப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதகோருகிறோம்.

விலாசம் மானேஜர்

ஸ்ரீ சௌடாம்பிகா

ஜவுளி வர்த்தகசாலை

உறையூர் போஸ்டு

திருச்சி


### பார்ப்பனீய மொழிந்த திதி

தென்காசித்தாலூகா போர்டு உயர்தரக் கலாசாலை உபாத்தியாயராகிய அ. அம்பலவாண பிள்ளையவர்களின் தந்தையாருக்காக 5—9—27 ல் நடந்த திதிக்கிரியை மேற்படி பள்ளிக்கூடத்தில் தலைமைத் தமிழாசிரியாக இருக்கும் திருநாவுக்கரசு தேசிகர் அவர்களைக் கொண்டு நடத்தப்பட்டது என்று ச. கருப்பையா பிள்ளை எழுதியிருக்கிறார்.

தீராத குஷ்ட ரோகங்களை தீர்க்கும் வல்லமையுடைய பழனி ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகளின் முதல் நெ. தாம்பர பற்பமேயாகும். ஏராளமான குஷ்ட ரோகிகள் இப்பழனியிலும், வெளியூர்களிலும், சௌக்கிய மடைந்து புகழ்ந்து கொண்டாடி வருகிறார்கள், நண்பர்கள் நேரில் விசாரித்தால் உண்மை தெரிய வரும். நன்றாய் கவனித்து உண்மையை தெரிந்து வாங்கி உபயோகியுங்கள். நமக்கு அண்டப் புளுகு புளுகதெரியாது.

## அசட்டையால் வரும் ஆபத்தை நீக்கி, யோசிக்கும் திறமையால் குணம் பெறலாம்:

அறிக்கை:—என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களபுரி பாவாஜி பெரிய யோகி மகான்நாலேந்து தலைமுறையாய்க் கையாண்டு வந்து இம்முறையை நான் இருபது வருஷம் தொண்டுசெய்து தெரிந்து கொண்டு, சாதுக்கள் அகாடாவை விட்டு பழனிக்கு வந்து அனேக கொடியரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள நற்சாட்சிகள்பலவுள. பக்தர், பிரபுக்கள் வேண்டுகோளுக்கிணங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன. பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அனேகம் ரோகங்களுக்கும் ஏற்பட்ட அனுபானத்துடன் கொடுத்துக் கைகண்டது. பல சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஆண் பெண் இருபாலரும் எந்த வயதாகயிருந்தாலும் சாப்பிடச்சரியாய் அமைக்கப்பட்டது. அபார சக்தி வாய்ந்தது வாந்தி முதலிய எவ்விதக்கெடுதலும் செய்யாதது.


பாலாமபிகை டிம்ரடமார்க்

# முதல் நெம்பர் தாம்பர பற்பம்.

தீரும் வியாதிகள்:— கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரி குஷ்டம், பொரி குஷ்டம், விரி குஷ்டம், எரி குஷ்டம் கபாலகுஷ்டம், குறை நோய், சில்லட்டைக்கடி, கடி விஷங்கள் 8-ம் நீராம்பல். பெருவயிறு, மகோதரம், நீர்கவசை, குன்மம், அண்டவாய்வு ஆனைக்கால், சூலை, திமிர், மதமதப்பு, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல், திரேகம் அழுகி துர்நாற்ற முடையவர்கள், ஆணிப்புண்கள், குழிப்புண், கிராணி, கண்டமாலை பவுத்திரம் இன்னும் அனேக கொடியரோகங்களை வெகு சீக்கிரத்தில் 5, 10, 21 வேளைகளில் குணப்படுத்தும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விலை விபரம் | முதல் நெ. தாம்பரபற்பம் | அனுபான | சூர்ணத்துடன் | 21-நாள் விலை ரூ. 30 | (தபால் சார்ஜ் பிரத்தியேகம்) |
| | ” | ” | ” | ” | 10-நாள் விலை ரூ. 15 | |
| | 2-ம் நெ. | ” | ” | ” | 40-நாள் விலை ரூ. 40 | |

நற்சாட்சியைக் கவனியுங்கள்:— 1. பழனியில் தாம்பர பற்பம் என்னும் பொழுது அதன் ஆசிரியரும் உற்பத்தி கர்த்தாவும் வட இந்தியா இமயகிரிச்சாரல் பெரிய யோகி மகான் மங்களபுரி பாவாஜியின் சீடர் பழனியில் சதானந்த மெடிகல் ஹால் வைததிருக்கும் ஸ்ரீமான் சற்குரு மகா தேவ சுவாமிகள் என்ற ஞாபகம் ஜனங்களுக்கு இருக்க வேணுமாக வற்புறுத்தி சிபார்சு செய்வேன். எங்கள் குடும்பங்களிலேயும் எங்கள் பந்துக்கள் குடும்பங்களிலேயும், எங்கள் சினேகிதர்களின் குடும்பங்களிலேயும், தீராத ரோகங்களை எல்லாம் தீர்த்து வந்தவர் இவரைத் தவிர வேறு ஒருவரையும் காணோம் சுவாமிகள் அயல் நாட்டிலுள்ள வியாதியஸ்தர்களின் மேல் வைத்துள்ள அன்பு மிகவும் பாராட்டத்தக்கதே நண்பர்கள் சுவாமிகளின் மருந்தை கையாள சகல வியாதிகளும் நீங்கி சுகமடைவார்களென்று ஒரு உறுதியாய்ச் செல்லுகிறேன்.

தாமரைக்குளம், பழனி 8-11-1925 எம். வேலுச்சாமி நாடாழ்வார் மிராஸ்தார்.

2. எனக்குள்ள பெரும் கடினமான குஷ்டரோகத்தைத் தீர்த்தவர் ஸ்வாமிகளே.

மாயப்ப கவுண்டர், விவசாயி, பழனி 14—7—25.

3, எனக்கு 6 வருஷ காலம் உள்ள கபால குஷ்டம் சுவாமிகளின் முதல் நெம்பர் தாம்பர பற்பத்தால் பூரண குணமடைந்தேன்.

பி, வி. சேஷய்யா பழனி தேவஸ்தான மணியம். 14—1—25

4. பழனி டவுன் முன்சிபல் கௌன்சிலரும், ஜவுளி வியாபாரியுமான முத்து அய்யர் சுயமாக தானே மருந்து சாப்பிட்டு சுய அனுபோகத்தின் பேரில் சொல்லுகிறதை கவனியுங்கள்:—

உலகத்தில் வைத்தியர்கள் நிரம்பத்தான் உண்டு. எல்லோரும் தான் தாம்பர பற்பம் செய்கிறோம் என்கிறார்கள். வியாதிகளைத் தீர்த்தவர்கள் இல்லை. வியாதிகளைத் தீர்க்க பெரிய அம்சம் பொருந்திய மகான்களின் முறையும் அனுக்கிரஹமும் வேண்டும். அவ்வனுகிரக்ஹங்கள் நிறைந்த தாம்பர பற்பம் என்பதும், பழனியில் தாம்பர பற்பம் என்பதும் ஸ்ரீலஸ்ரீ சற்குரு மகாதேவஸ்வாமிகள் தாம்பர பற்பமேயாகும்.

தாம்பர பற்பம் குஷ்டரோக முதலானதுகளைப்பற்றி உண்மை தெரிய விரும்புவோருக்கு நான சற்குரு மகாதேவ ஸ்வாமிகள் தாம்பர பற்பத்தையே பெரிதும் சிபார்சு செய்வேன்.

எனக்கு சுகத் தாழ்வு ஏற்பட்டு பலரும் என்னைக்கைவிட்டு எனக்குப்பிரிந்திய காலத்தில் என் சொத்து குடும்ப முதவியவைகள் ஊர்ஜிதத்திலிருந்து வரவேண்டியதை உத்தேசித்து நான் உயில் சாசனம் எழுதிவைத்தபின் நான் இறந்து போகாமல் மீட்டு இந்த நற்சாக்ஷியை உலகத்திற்கு வெளியிடச் செய்தவர் ஸ்ரீலஸ்ரீ சற்குரு மகாதேவ ஸ்வாமிகளேயாகும்

எம். எ. எஸ் முத்துசாமி அய்யர் முனிசிபல் கவுன்சிலர் அண்டு ஜவுளி வியாபாரம், பழனி, 7-2-28

5. மகா.ள-ள-ஸ்ரீ மகாகனம் பொருந்திய ஸ்ரீமத் சற்குரு மகா தேவஸ்வாமி அவர்களுக்கு பினுங்கு பிரையில் (Prye) சி. வி. தோமாஸ் எழுதிக் கொண்டது:—

அய்யா, எனக்கு நீங்கள் அனுப்பிய முதல் நெம்பர் தாம்பிர பற்பம் ஐந்து நாள் சாப்பிட்டேன். எனக்கிருந்த கருமேக நீர் சுண்டி, சகல ரோகங்களும் சுகமாகி விட்டது. இனியும் பாக்கி மருந்து கைவசமிருக்கிறது. கஷ்டப்படுகிறவர்களை சௌக்கியப்படுத்தி ரக்ஷிக்கும்பொருட்டு கடவுள் உங்களை அவதார ரூபமாக இப்பேர்ப்பட்ட ரோகங்களை சவுக்கியப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தியிருக்கிறார் என உறுதியாய் நம்புகிறேன்.

இப்படிக்கு சி வி தோமாஸ் அன்னதாபுரம் பிறை, பினாங்கி 16—2—27

மற்ற ஏராளமான நற்சாட்சிகளை நமது கியாட்லாக்கில் பார்க்கவும்

விவரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள் ஆர்டர் செய்யுங்கள்.

மலாய் நாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது முன் பணம் ரூ. 5 அனுப்ப வேண்டும்

# ஸ்ரீமத் சற்குரு மஹாதேவ சுவாமிகள்,

சதானந்த மெடிகல் ஹால் பழனி. மதுரை ஜில்லா, தென்னிந்தியா.

தந்தி விலாசம் “சர்குரு” பழனி Tele Addres:—“Sarguru” Palni.

நமது சோல் ஏஜண்டு { M. E. நாயுடு அவர்கள், டிரஸ்ஸர் 86டேலுக்கெடாங்கு ரோட்டு. கிளாங்கு— Klang F. M S

ஸ்ரீமதி ஈ. கம்மாளவர்களால், ஈரோடு “உண்மை விளக்கம்” பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.